பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 26 திங்கட்கிழமை (10-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:157

5 ஆந்தர புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் அங்கம் II உள்ளே!

# வெளிநாட்டுத் தூதர்களுக்கு தீர்வுத் திட்டம் விளக்கப்படும்

## அரசாங்கத் தரப்பில் ஏற்பாடு

கொழும்பு,ஜூலை10

**அரசாங்கத் தரப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் கண்ட இனப்பிரச்சினைக்கான உத்தேச தீர்வுத் திட்டம் குறித்து, கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு - மேற்குநாட்டு இராஜதந்திரிகளுக்கு - விளக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.**

**அவர்களுடனான சந்திப்பு ஒன்றை நடத்தி, புதிய திட்டத்தின் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க உள்ளது என்பது குறித்து விளக்குவதில் அரசாங்கம் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் மேற்கு நாடுகள் அக்கறை காட்டி வருகின்றன. நியாயமான தீர்வு ஒன்று விரைவில் காணப்பட வேண்டும் என்று பல வெளிநாடுகளும் மறைமுகமாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. தீர்வு ஒன்று காணப்பட்டு போர் நிறுத்தப்பட்டால் அபிவிருத்திக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அதிக

(12ஆம் பக்கம் பார்க்க)

## முறைப்பாடு தெரிவிக்க வசதி

யாழ்ப்பாணம்,ஜூலை10

வலிகாமம் பகுதியில் உள்ள மக்கள் தமது பிரச்சினைகள், பாதிப்புக்கள் தொடர்பாக முறையிடுவதாயின் 51ஆவது படையணி அதிகாரியுடன் தொடர்புகொள்ளுமாறு பலாலி இராணுவத் தலைமையகம் கோரியுள்ளது.

இது விடயமாக நேற்று விடுக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலிகாமம் தெற்கு (உடுவில்), வலி.கிழக்கு (கோப்பாய்), நல்லூர்,வலி.மேற்கு (சங்கானை), வலி. வடக்கு (தெல்லிப்பழை), வலி.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுச் சம்பவத்தில் இருவர் பலி

மட்டக்களப்பு,ஜூலை10

மட்டக்களப்பு கோட்டை முனைப்பாலத்தில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவம் ஒன்றில் இருவர் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த பிஸ்ரல் குழு உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரும் சிவில் தொண்டர் படையைச் சேர்ந்த ஒருவருமே உயிரிழந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

சிவில் தொண்டர் படையைச் சேர்ந்தவர் மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் பணிபுரிபவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-21)

## கப்பல் பயணிகளுக்கு அழைப்பு

யாழப்பாணம்,ஜூலை10

"சிற்றி ஒவ் றிங்கோ" கப்பலில் பயணம் செய்வதற்கு ரிக்கெற் பெற்றவர்கள் மட்டும் இன்று காலை ஏழு மணிக்குப்பயண ஆயத்தங்களுடன் சிங்கள மகா வித்தியாலய மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் புதிதாக எவருக்கும் ரிக்கெற் வழங்கப்படமாட்டாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் நான்கு கப்பல் பயணங்களுக்கான பதிவுகள் பூர்த்தியாகி விட்டதால் 5ஆவது பயணத்துக்கு மட்டுமே இனிமேல் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் -

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கப்பல் பயணங்களுக்கு பதிவு செய்யமுடியும் என்று எதிர்பார்த்து வீணே சிவில் அலுவலகத்துக்கு அலைய வேண்டாம் என்றும் - அந்த அதிகாரி "உதயன்" மூலம் கேட்டுள்ளார். (அ)

## புதனன்று ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை10

அரசின் அதிகாரப் பகிர்வுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. அமைப்பு நாளைமறு தினம் புதன்கிழமை நுகேகொடையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வுத் திட்டம் நாட்டை இரண்டு கூறுகளாகப் பிரிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுத் திட்டத்தை தமிழ்க்கட்சிகள் ஏற்க வேண்டும் என்கிறார் அஷ்ரப்!

கொழும்பு,ஜூலை10

அரசுக்கும் பிரதான எதிர்க்கட்சிக்கும் இடையே இணக்கம் காணப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டத்தினை தமிழ்க் கட்சிகள் ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் பேச்சு நடத்தி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார் முஸ்லீம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப்.

இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்கள் 13ஆம் திருத்தச் சட்டத்தைவிட அதிகாரம் கூடியவையாகவுள்ளன. எனவே இதன் மூலம் 13ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கக் கூடிய நிலை தோன்றியுள்ளது.

எனவே இனியும் இணக்கம் காணப்படவேண்டிய விடயங்களை தமிழ்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்குவதாகவுள்ளன -

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## கூட்டணி இன்று ஆராயும்

கொழும்பு,ஜூலை10

அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து தயாரிக்கப்பட்டுள்ள தீர்வு யோசனை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று கூடி ஆராயவுள்ளது.

இந்தத் தீர்வு யோசனை வரைவு நேற்று தமது கட்சிக்குக் கிடைத்ததாகவும் இது தொடர்பாக கூட்டணி உயர்மட்டம் இன்று கூடி ஆராயவிருக்கின்றது என்றும் - கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

"இந்த வரைவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு தீர்வாக இது அமையாது. ஜனாதிபதியைச் சந்திக்கும் வேளை அவரிடம் இதைத் தெரிவிப்போம்" என்று அவர் தெரிவித்தார்.

அரசு - ஐ.தே.க - தமிழ் கட்சிகள் சந்திக்கும் முத்தரப்புப் பேச்சுக்கான திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை என்றும் - அவர் குறிப்பிட்டார். (ஐ-3)

## நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

திருகோணமலை,ஜூலை10

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரன் வலயப் பணிப்பாளர்களுக்கு இன்று பணிப்புரை விடுக்கவுள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலமாக இது தொடர்பான பணிப்புரையை தாம் அனுப்ப இருப்பதாக அவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

சகல கற்கை நெறிகளுக்குமான

(12ஆம் பக்கம் பார்க்க)

### பொதுத் தேர்தல் காலத்தில்

## மேடைப் பிரசாரத்துக்கு இம்முறை தடைவிதிப்பு?

கொழும்பு,ஜூலை10

விரைவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் பிரசாரம் செய்வதற்கு பொது மேடைகளைப் பயன்படுத்துவதை தடைசெய்வது குறித்து தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவித்தன.

தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாக மட்டுமே கட்சிகள் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிப்பது என்றும் தேர்தல் கூட்டங்கள் நடத்துவதை தடைசெய்ய உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொது மேடைகளில் இடம்பெறும் பிரசாரங்களின் போது தாக்குதல்கள் நடப்பதற்கு வாய்ப்பு இருப்பதால் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு கூட்டங்களைத் தவிர்ப்பது குறித்து ஆராயப்படுவதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஐ-7)

### சாதகமான பதில் கிடைக்காவிடில்

## ஜி.சீ.ஈ. பரீட்சையை பகிஷ்கரிக்க முடிவு!

### தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை10

தமிழ் மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் எதிர்நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள ஆறு அம்சக் கோரிக்கைகளுக்கு அரசிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் -

எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாக உள்ள ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை தொடர்பான பணிகளைச் செய்யாமல் பகிஷ்கரிப்பதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கையை அரசு எடுக்காத பட்சத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது என்றும் முடிவு செய்யப்பட்டிருப்பதாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-3)

## கைத்தொழில் அமைச்சர் பதவி றொனி டி மெல்லுக்குக் கிடைக்கும்?

கொழும்பு,ஜூலை10

விரைவில் பொதுமக்கள் ஐக்கிய முன்ன்ணியில் இணைவார் என எதிர்பார்க்கப்படும் மாத்தறை மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் றொனி டி மெலுக்கு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்களில் தகவல் வெளியாகி உள்ளது.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக இருந்த சி.வி.குணரத்தின கொலை செய்யப்பட்டதை அடுத்து அந்த அமைச்சுப் பொறுப்பு ஜனாதிபதி வசம் உள்ளது.

இதேவேளை -

இந்தப் பதவியை றொனிக்கு வழங்குவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சில சிரேஷ்ட அமைச்சர்கள் மத்தியில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. (ஐ-3)

## தட்டுவன்கொட்டிப் பகுதியில் புலிகள் மோட்டார் தாக்குதல்!

கொழும்பு,ஜூலை10

வெலிக்கந்த மற்றும் தட்டுவன் கொட்டிப் பகுதிகளில் நேற்றுமுன் தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஏழு பேர் பலியானதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

ஆனையிறவு தட்டுவன்கொட்டிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியதில் படையினர் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெலிக்கந்த தலாபொல பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் நடத்திய தாக்குதலில் புலிகள் இருவர் உயிரிழந்ததாகவும் அவர்களிடம் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கிகள் இரண்டையும், 3 எறிகணைகள் மற்றும் பலியான உறுப்பினர் ஒருவரின் சடலம் ஆகியவற்றையும் கைப்பற்றியதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (ஐ-4-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இடம்பெயர்ந்த சிறுவர்களின் நலனைக் கவனிக்க வசதி

வலிவடக்கு,ஜூலை10

இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நீக்குவது தொடர்பான செயற்பாடுகளை சுகவாழ்வு நிலையம் மேற்கொண்டுள்ளது.

ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள புனித மரியாள் தேவாலயத்தில் தங்கி உள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கே இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யுனிசெவ் நிறுவன அலுவலர் பெனி தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்தச் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்துள்ளார்.

வண.பிதா டேமியன் இந்தச் செயற்பாட்டை மேற்பார்வைசெய்து வருகின்றார். (இ-86)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 8ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/138413/A, | 513/143925/A |
| 513/143965/A, | 513/144020/A |
| 513/144020/B, | 513/144232/A |
| 513/144232/B. | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/140352/A, | 512/140352/B |
| 512/144258/A, | 512/144386/A |
| 512/144386/B, | 512/144413/A |
| 512/144413/B, | 512/144413/C |
| 512/144417/A, | 512/144417/B |
| 512/144417/C, | 512/144417/D |
| 512/144484/A, | 512/144484/B |
| 512/144528/A, | 512/144528/B |
| 512/144536/A, | 512/144536/B |
| 512/144585/A, | 512/144586/A |
| 512/144613/A, | 512/144613/B |
| 512/144618/A, | 512/144618/B |
| 512/144622/A, | 512/144622/B |
| 512/144629/A, | 512/144629/B |
| 512/144629/C, | 512/144631/A |
| 512/144637/A, | 512/144637/B |
| 512/144637/C, | 512/144637/D |
| 512/144637/E, | 512/144647/A |
| 512/147881/A, | 512/147881/B |
| 512/147881/C, | 512/147993/A |
| 512/147993/B, | 512/147993/C |
| 512/148101/A, | 512/148101/B |
| 512/148184/A, | 512/152570/A |
| 512/152570/B. | |

### நல்லூர்

| | |
|---|---|
| 512/144311/A, | 512/144311/B |
| 512/144470/A, | 512/144470/B |
| 512/144470/C, | 512/144651/A |
| 512/144651/B, | 512/147872/A |
| 512/147895/A, | 512/147895/B |
| 512/147895/C, | 513/127137/A |
| 513/127137/B, | 513/141988/A |
| 513/144221/A, | 513/147233/A |
| 513/147233/B, | 513/147233/C |
| 513/152528/A, | 513/152528/B. |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/143976/A, | 513/144113/A |
| 513/144113/B, | 513/144113/C |
| 513/144161/A, | 513/144198/A |
| 513/144199/A, | 513/152555/A |
| 513/152555/B, | 513/152555/C. |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/143832/A, | 513/143832/B |
| 513/144138/A, | 513/144138/B |
| 513/147124/A, | 513/147124/B. |

### உடுவில்

| | |
|---|---|
| 513/144074/A, | 513/144104/A |
| 513/144104/B, | 513/147188/A |
| 513/147188/B, | 513/147188/C |
| 513/147188/D, | 513/147286/A |


## அறிவித்தல்

**சிவசுப்பிரமணியம்ஸ், சாவகச்சேரி**
**எனும் ஸ்தாபனம்**

இடம்பெயர்ந்து தற்போது பண்டத்தரிப்பு பிரதான வீதியில் செயற்பட்டு வருகின்றது. இங்கு சகல, மும்மொழிபெயர்ப்பு, ரைப்பிங், சத்தியக்கூற்று, சிவில் பாஸ், விசாவேலைகள், கடித வேலைகள் ஆகியன செய்து கொடுக்கப்படும். (76330)

## கலாலயா பயிற்சியகம்

யாழ்ப்பாணம்

வகுப்புக்கள் மீண்டும் (12-07-2000) புதன்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.
(76329) - இயக்குநர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

**மனமார வாழ்த்துகின்றோம்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்

**'கலாபூஷணம்'**

விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஈழத்தின் தலைசிறந்த மூத்த நாதஸ்வரக் கலைஞன்

**திரு. என். ஆர். சுந்தரமூர்த்தி** அவர்களை

பாராட்டி வாழ்த்துவதோடு அவரது கலைப்பணி தொடர இறை ஆசியை வேண்டுகிறோம்.

"சிற்பக்கலாநிதி"
ந.சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார்
குடும்பத்தினர்

திரவிகா கலைக்கூடம்,
அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (C/12182)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

**வாழ்த்துகின்றோம்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்

**'கலாபூஷணம்'**

விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஈழத்தின் மூத்த நாதஸ்வரக் கலைஞன்

**திரு.என்.ஆர்.சுந்தரமூர்த்தி** அவர்களை

மனமாரப் பாராட்டி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

'கலாபூஷணம்'
சிற்பச் சக்கரவர்த்தி ஆ.ஜீவரட்ணம்
ஆச்சாரியார் குடும்பத்தினர்.

ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி. (C/12183)


# நெருக்கடியான சூழலின் மத்தியிலும் கலைஞர்களைக் கௌரவிக்க வேண்டும்

## 'கலாபூஷணம்' விருது வழங்கும் நிகழ்வில் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,ஜூலை10

"கலைஞர்கள் இந்த உலகத்தில் வாழும் பொழுதே பாராட்டிக் கௌரவிக்கப்படவேண்டியவர்கள். இதனால்தான் 'கலாபூஷண விருது' பெற்ற யாழ்ப்பாணக் கலைஞர்களுக்கான விருது வழங்கும் விழாவை இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் - காலம் தாழ்த்தாது மிகவும் அடக்கமான முறையில் நாம் இங்கு நடத்தியுள்ளோம்."

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற 'கலாபூஷண' விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச அதிபர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று விருது பெறும் கலைஞர்களை யாழ்ப்பாணமே திரண்டு பெரும் விழா எடுத்துப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும். ஆனால் குடாநாட்டின் தற்போதைய சூழல் அதற்கு இடம்கொடுக்கவில்லை.

தமிழர்களின் - குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின் - தனித்துவமான கலைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த வகையில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் ஆற்றிவரும் பணிகளும் இங்கு நினைவு கூரப்படவேண்டியவை.

யாழ்.செயலகத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கிய கலாசாரப் பேரவை மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டும். இதன் மூலம் தமிழர்களின் கலைகளை அழியவிடாது பேணிப்பாதுகாக்க முடியும் - என்றார்.

விருது வழங்கும் விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தனது உரையில் -

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் 'கலாபூஷண விருது' கலைஞர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். எனவே அந்த விருதைப் பெறும் கலைஞர்கள் சமுதாயத்தில் உயர்நிலையில் வைத்து கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

### கலாசார பேரவையை மீள அமைக்குக

எமது சமூகத்தில் கலைஞர்களுக்கு உரிய இடமளிக்கப்படுமானால் இளம் கலைஞர்கள் பலர் உருவாகுவர். எனவே அருகி வரும் எமது கலைகளைப் பாதுகாக்க யாழ். செயலகத்தில் இயங்கிய கலாசாரப் பேரவை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இந்தக் கலாசாரப் பேரவை ஓவியக் கண்காட்சி மற்றும் சிற்பக் கண்காட்சிகளை நடத்தி கலைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் - என்றார்.

சிறப்புரையாற்றிய தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் தனது உரையில் தெரிவித்ததாவது:-

எமது சமூகத்திலிருந்து வரும் ஒரு குறை கலைஞர்கள் உயிருடன் வாழும்போது கௌரவிக்கப்படாமல் அவர்கள் இறந்த பின்னர் சிலைகள் எழுப்பப்படுவதும், பட்டம் சூட்டுவதும் ஆகும். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

இந்த வகையில் 'கலாபூஷண' விருது வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்த அனைவரும் போற்றத்தக்கவர்கள். கலைஞர்கள் எமது சொத்துக்கள். எனவே அவர்களின் தேவைகளை இனம்கண்டு பூர்த்தி செய்வதில் நாம் கூடிய அக்கறை காட்டவேண்டும். சமுதாயத்தின் கண்களுக்கு கலைஞர்களைக் கொண்டுவரவேண்டும் - என்றார்.

நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா தனது உரையில்:-இந்தியாவில் சினிமாக் கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படுகின்றார்கள். ஆனால் எமது நாட்டில்தான் ஓவியம், சிற்பம் மற்றும் இசை, நாடகம், நாட்டுக்கூத்து முதலிய துறைகளில் சிறந்து விளங்கும் மூத்த கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்கள் - என்றார்.

கலாபூஷணம் விருது பெற்ற 9 கலைஞர்களில் நேற்றைய தினம் 8 கலைஞர்கள் தமக்குரிய சான்றிதழையும் பத்தாயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் பெற்றுக்கொண்டனர். (ஐ-7)

### கட்டடத் திறப்பு விழா

கொழும்புத்துறை,ஜூலை10

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய மத்திய வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு கட்டடத்தின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

இந்தக் கட்டடம் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. (ஐ-30)

### மாணவர் சிரமம் நீங்கியது

யாழ்ப்பாணம்,ஜூலை10

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு கலட்டிச்சந்தி ஊடான பாதை பொதுமக்களின் அன்றாடப் பாவனைக்கு உட்பட்டுள்ளதைத் தொடர்ந்து தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் போக்குவரத்து இலகுவாகியுள்ளது.

கடந்த நான்கு வருடகால மாக இந்தப் பாதை தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

### அனுமதி பெற கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை10

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் தற்பொழுது இயங்கிவரும் தென்மராட்சிப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

இதுவரை அனுமதி பெறாத, தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களை மேற்படி பாடசாலைக்குச் சமுகமளித்து அனுமதியைப் பெறுமாறு அதிபர் க.மயில்வாகனம் கேட்டுள்ளார். (இ-74)


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்பா, ரகுவரன்
நடித்த
**அருணாச்சலம்**
புதிய நேரம் 10.30, 2.00
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் மிக விரைவில் விருந்தாகின்றது
**படையப்பா**
(C/12143)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
கார்த்திக், ரோஜா
நடிப்பில்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
11-07-2000 முதல்
**குடியிருந்த கோயில்**
(C/12174)


# நெடுந்தீவு இறங்குதுறையை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூலை10

பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்களை விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு இறங்குதுறையின் அபிவிருத்திக்கென இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவுப் பிரதேச சபைத்தலைவர் புலவர்ஏ.டபிள்யூ. அரியநாயகம் தெரிவித்தார்.

இந்த நிதியுதவியினைக் கொண்டு இறங்குதுறையில் உள்ள மண்டபம் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தேநீர்ச்சாலை ஒன்றும், பொதுமலசலகூடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-111)

# மரக்கூட்டுத்தாபனத்தின் 7 ஊழியருக்கு இடமாற்றம்

## அனுராதபுரத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.அரச கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 7 உத்தியோகத்தர்கள் அனுராதபுரத்துக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

எஸ்.நடராஜா, என்.பரமசிவம், எம்.கந்தசாமி, எஸ்.வித்தியகுமார், ஜி.ஜெயதாசன், எஸ்.லூக்காஸ், ரி.தேவராஜா ஆகியோரே இடமாற்றம் செய்யப்பட்டவர்களாவர்.

திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது இடமாற்றத்தை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதனிடம் தெரிவித்துள்ளனர்

இது தொடர்பாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர் எஸ்.நிசாந்தன் மூலம் ஈ.பி.டி.பியின் செயலாளர்நாயகமும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவுடன் தான் உடனடியாகத் தொடர்பு கொண்டுள்ளதாக ந.திரிலோகநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-7)

### கிணற்றிலிருந்து மீட்ட பாம்புக்கு ஒருவர் பலி

நெல்லியடி,ஜூலை10

கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட நாகபாம்பு கடித்ததனால் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். இந்தச்சம்பவம் கடந்த 4 ஆம் திகதி புத்தூர் நிலாவரை வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இ.சிவகுருநாதன் (வயது48)என்பவரே பாம்பினால் கடியுண்டு இறந்தவராவார். (இ-109)

### கிராம அலுவரை சந்திப்பதில் மக்கள் சிரமம்

தென்மராட்சி,ஜூலை10

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர் பலர் இடம் பெயர்ந்து வலிகாமம் பகுதிகளில் தங்கியுள்ளதால் மக்கள் தமது தேவைகளுக்காக அவர்களின் வீடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாரத்தில் ஒரு நாளாவது நெல்லியடியில் இயங்கும் தற்காலிக அலுவலகத்தில் அவர்கள் சமுகமளித்தால் மக்களின் கஷ்டங்கள் குறையுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### தென்மராட்சியில் இறந்தோரின் விவரம் சேகரிப்பு

தென்மராட்சியில் அண்மையில் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதல் மற்றும் ஷெல் வீச்சுக்களால் மரணமடைந்த பொது மக்களின் விவரங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர்களால் இறந்தவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### கல்கத்தா மேயர் தேர்தலில்

# 15 வருடங்களின் பின்னர் இடதுசாரிகள் தோல்வி!

கல்கத்தா, ஜூலை 10

கல்கத்தா மாநகராட்சியின் மேயர் பதவிக்கான தேர்தலில் இடதுசாரி முன்னணி 15 வருடங்களின்பின் தோல்வியடைந்துள்ளது.

மம்தாபானர்ஜி தலைமையிலான திருணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் சுப்பிரதோ முகர்ஜி தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் கான்சி கங்குலியை 4 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

141 உறுப்பினர்களைக் கொண்ட மாநகர சபையின் தேர்தலில்முகர்ஜிக்கு66வாக்குகளும் கங்குலிக்கு 62 வாக்குகளும் கிடைத்தன. 13 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

நீண்டகாலமாகக் கல்கத்தாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் முன்னணிக்குச் சமீப காலமாகப் பல பின்னடைவுகள் ஏற்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் மேற்கு வங்க மாநிலத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களிலும் திரிணாமுல் காங்கிரஸ் பெரும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

சில மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து அரசியல் நடத்தும் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி வைத்தது உள்ளிட்ட கொள்கைக் குழப்பங்களே மேற்கு வங்கத்தில் எதிரொலித்திருப்பதாகக் கருதப்படுகிறது (இ-ஒ)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு காஞ்சிகாமகோடி புதிய யோசனை.



சென்னை, ஜூலை 10

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பௌத்தர்களும். இந்துக்களும் சுழற்சி முறையில் அந்த நாட்டின் தலைமைப் பதவியை மாறி மாறி வகிக்க வேண்டும் என்று காஞ்சி காமகோடி பீடம் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி யோசனை கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சில ஆண்டுகளின் முன் உத்தரப் பிரதேசத்தில் பா.ஜ.கவும் பகுஜன் சமாஜ் கட்சியும் மாறி மாறி மாநிலத்தில் ஆட்சி நடத்தியதை ஜெயேந்திரர் அப்போது நினைவுபடுத்தினார்.

சுழற்சி ஆட்சிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டால் யுத்தத்துக்காகச் செலவாகும் பணத்தை மிச்சப்படுத்தி ஆக்கபூர்வ வழிகளில் செலவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-ஒ)

## நஞ்சு கலந்த தானியத்தால் இந்தியாவில் மயில்கள் மரணம்!

புதுடில்லி, ஜூலை 10

மத்தியப்பிரதேசம் பெரினா மாவட்டத்தில் பெருமளவில் மயில்கள் இறந்து வருகின்றன. நேற்று மட்டும் சுமார் 30 மயில்கள் இறந்து கிடந்துள்ளன.

பூச்சிகொல்லி மருந்து கலந்து விதைக்கப்பட்டிருந்த தானிய முளைகளைத் தின்றதாலேயே இந்த மயில்கள் உயிரிழந்ததாக மாவட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாநிலத்தில் கடும் வரட்சி நிலவிய பின் தற்போதுதான் பயிர்ச்செய்கை ஆரம்பித்திருந்தது. வரட்சியால் விதைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் கிடைத்த தானியமுளைகளுக்கு வழக்கத்திலும் அதிகமாக பூச்சி கொல்லிகளை விவசாயிகள் கலந்து விதைத்ததாகக் கருதப்படுகிறது.

அதிலும் பெரினா மாவட்டத்தில் மயில்களுக்கு மிகவும் பிடித்த தானிய வகைகள் விதைக்கப்பட்டிருந்தன இவற்றைத் தின்ற மயில்களே உயிரிழந்துள்ளன.

இதுவரை சுமார் 85 மயில்கள் வரை இறந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

விவசாய நிலங்களில் முடிந்த அளவு நீரைத்தேக்கி வைக்கும்படியும், அதனால் பூச்சி கொல்லியின் தாக்கம் குறைக்கப்படுவதால் மயில்களுக்கு ஏற்படும் பாதிப்புத் தடுக்கப்படும் என்றும் மாவட்ட நிர்வாகம் தற்போது அறிவித்துள்ளது. [ஐ-ஒ]

## வீனஸ் வில்லியம்ஸ் பட்டம் வென்றார்

வாஷிங்ரன், ஜூலை 10

விம்பிள்டன் டெனிஸ்போட்டியில் மகளிர் ஒற்றையர் 'சாம்பியன்' பட்டத்தை அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் வென்றுள்ளார். இறுதிப் போட்டியில் தன்னை எதிர்த்து விளையாடிய லின்சி டேவன் போர்ட்டை 6-3, 7-6' செட் கணக்கில் வீனஸ் வென்றார்.

கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வீனஸ் வில்லியம்ஸ் வெல்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-ஒ)

### உலக அரங்கில்

## பெண் வழக்கறிஞர் தற்கொலை: பாலியல்துன்புறுத்தல் காரணமா?

### விசாரணை நடத்தக் கோரிக்கை

ஹைதராபாத், ஜூலை 10

ஆந்திர உயர் நீதி மன்ற பெண் வழக்கறிஞர் சஞ்சிதா சர்மா என்பவரின் தற்கொலை குறித்து மத்திய புலனாய்வுத்துறை விசாரணை நடத்த வேண்டும் என்று மகளிருக்கான தேசியக் கமிஷன் கோரியுள்ளது.

சஞ்சிதாவுடன் பணிபுரிந்த சக ஆண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாலேயே அவர் தற்கொலை செய்துகொண்டார் என்பதற்குப் போதுமான முதல் நிலைச் சான்றுகள் உள்ளதாகவும் கமிஷன் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற வளாகத்தின் உள்ளே நடைபெறும் சில தகாத நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு தீவிர விசாரணை நடத்த வேண்டும் என்று சஞ்சிதாசர்மா தற்கொலை செய்ய முன் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இது தமது கோரிக்கைக்கு ஒரு வலுவான ஆதாரமாக அமைந்துள்ளதாக கமிஷனின் தலைவர் தீபா பார்த்தசாரதி தெரிவித்தார். (இ-ஒ)

## வைகோ., ராமதாஸை நாடு கடத்தினால் இந்திய அரசியல்வாதிகள் பலரை பிஜிக்கு அனுப்பவேண்டியிருக்கும்

### தமிழகத் தலைவர் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 10

டாக்டர் ராமதாஸ், வைகோ போன்றவர்களை இலங்கைக்கு நாடு கடத்தினால் இந்திய அரசியல்வாதிகள் பலர் பிஜி, இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்குச் செல்லவேண்டியிருக்கும் என்று பிற்படுத்தப்பட்ட மக்களிடம் செல்வாக்குப் பெற்ற புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி விடுத்த அறிக்கையில் எச்சரித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்—தேசிய இனப் போராட்டத்தில் பல கட்டங்கள் உண்டு. கூடுதல் அதிகாரப் பரவல், தன்னாட்சி, தனி நாடு ஆகியவை உலக வரலாற்றில் புதிதல்ல. சைபிரஸ், செக்கோஸ்லோவேக்கியா, பங்களாதேஷ் போன்ற பல நாடுகளின் சான்றுகளும் உண்டு.

தமிழகத் தலைவர்களான முதல்வர் கருணாநிதி, ராமதாஸ், வைகோ ஆகியோர் தமிழருக்காகக் குரல் கொடுப்பதில் தவறில்லை. இவ்வாறு கிருஷ்ணசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசும் தலைவர்களை அங்கேயே அனுப்ப வேண்டும் என்று ஜெயலலிதா உட்படத் தமிழக அரசியல்வாதிகள் சிலர் கோரியிருந்தது தெரிந்ததே. (இ-ஒ)

## இராணுவத்துடன் நடந்த மோதலில் பிஜி கிளர்ச்சியாளர் ஒருவர் மரணம்!

சுவா, ஜூலை 10

பிஜியில் இராணுவத்துடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் சூட்டுக்காயங்களுக்கு இலக்கான கிளர்ச்சியாளர்களில் ஒருவர் மரணமடைந்தார்.

24 வயதான இவர் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட்டின் தலைமையிலான புரட்சிப் போர்முனைப் பிரிவில் முக்கிய பதவியில் உள்ளவராவார்.

இதே சமயம் நாடாளுமன்றக் கட்டடத்தில்உள்ள மகேந்திர சௌத்ரி உட்பட 27 பேரினதும் கடந்த வாரம் சிறைப்பிடிக்கப்பட்ட 30 பேரினதும் விடுதலை குறித்து கிளர்ச்சியாளர்களுக்கும் சிவில் அரசுக்கும் இடையில் தொடர்ந்து பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

பிஜியின் பூர்வகுடிகளிடையே செல்வாக்குப் பெற்ற தலைவர்களிடம் நாட்டின் ஆட்சியை ஒப்படைக்கும் படியும்— இதன்மூலம் பிஜியில் தற்போதைய குழப்ப நிலைக்குக் காரணமான அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படக் கூடிய நிலையை ஏற்படுத்தலாம் என்றும் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட் இராணுவ ஆட்சியாளர்களிடம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது' (இ-ஒ)

## அரசியல் தஞ்சம் கோருவோர் சுவிஸில் குறைந்து வருகின்றனர்

சூரிச், ஜூலை 10

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோருபவர்களின் எண்ணிக்கை தற்போது வெகுவாகக் குறைந்து வருவதாக அந்நாட்டின் குடியகல்வு மற்றும் குடிவரவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

5 வருடங்களுக்கு முன்பிருந்ததை விடக் கடந்த ஜூன் மாதம் இந்த எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்துள்ளது என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோருபவர்களில் யூகோஸ்லாவியர் முதலிடத்தில் உள்ளனர். அடுத்து துருக்கியரும், இலங்கையர் 5 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர். (இ-ஒ)

## உலகக் கிண்ண போட்டி நடத்தும் உரிமைபற்றி ரகசிய விசாரணை

சூரிச், ஜூலை 10

எதிர்வரும் 2006 ஆம் ஆண்டின் உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு ஜேர்மனிக்கு வழங்கப்பட்டது குறித்து இரகசிய விசாரணை நடத்தப்போவதாக உலக உதைபந்தாட்டச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா தெரிவித்துள்ள முறைப்பாட்டைத் தொடர்ந்தே, சம்மேளனம் இந்த முடிவை' எடுத்துள்ளது.

சமீபத்தில் சூரிச் நகரில் கூடிய உலக உதைபந்தாட்டச் சம்மேளனக் கூட்டத்தில் 2006 ஆம் ஆண்டில் உலகப் போட்டியை நடத்தும் நாடு வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டது. இந்த வாய்ப்புக்காகத் தென்னாபிரிக்காவும் ஜேர்மனியும் போட்டியிட்டன.

அப்போது இருநாடுகளும் சம வாக்குகளைப் பெற்றன. ஆனால் சம்மேளனத்தின் வாக்குக் கிடைத்ததால்போட்டியை நடத்தும் வாய்ப்பு ஜேர்மனிக்குக் கிட்டியது.

இந்த வாக்கெடுப்பில் நியூசிலாந்துப் பிரதிநிதி கலந்து கொள்ளவில்லை.

இந்த வாக்கெடுப்பு முடிவு முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாகவே தென்ஆபிரிக்கா புகார் கூறியுள்ளது. (ஐ-ஒ)

## லாலு வழக்கில் நீதிமன்றம் உத்தரவு

பட்னா, ஜூலை 10

முன்னாள் பிஹார் முதல்வர் லாலு பிரசாத் யாதவுக்கு எதிரான மாட்டுத்தீவன ஊழல் வழக்கில் விசாரணைகளை விரைவுபடுத்துமாறு பட்னா நீதிமன்றம் மத்திய புலனாய்வுத்துறை, வருமான வரித்துறை மற்றும் அமுலாக்கல் பிரிவு ஆகியவற்றுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

லாலு முதல்வராக இருந்த போது மாட்டுத்தீவனம் வாங்கி அரசு சார்பில் மக்களுக்கு வழங்கியதாகக் கணக்குக் காட்டி 400 கோடி ரூபா முறைகேடாக மறைக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. (ஐ-ஒ)

## விமானக் கடத்தற்காரர்களை ஒப்படைக்க இந்தியா கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 10

கடந்த ஆண்டு டிசெம்பரில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தைக் கடத்திய ஐந்து கடத்தற் காரர்களையும் அவர்களது இரண்டு கூட்டாளிகளையும் ஒப்படைக்குமாறு பாகிஸ்தானிடம் இந்தியா முறைப்படி வேண்டுகோள் விடுத்துள்ளது. கடத்தற் காரர்களான இப்ராகிம் அக்தர், சலீம் அகமட், காசிம், யகூர் இப்ராகிம், சகித் அக்தர் சையத் ஆகியோரையும் கடத்தல் சதியில் ஈடுபட்ட யூசுப் அசார் அப்துல்ராவுப் ஆகியோரையும் இந்தியாவிற்கு வழக்கு விசாரணைகளுக்காக அனுப்பும்படி மத்தியபுலனாய்வுத்துறை பாகிஸ்தானிடம் இந்த வேண்டுகோளை அலுவலக பூர்வமாக விடுத்துள்ளது.

இந்த வழக்குத் தொடர்பாக ஏற்கனவே 'இண்டர் போல்' சர்வதேசப் பொலிஸ் அமைப்பிடம் இந்தியா அணுகியிருந்தது.

நேபாளத்திலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு இந்திய விமானம் கடத்தப்பட்டதும், கடத்தற் காரர்களின் கோரிக்கையை ஏற்று இந்தியா தீவிரவாதத் தலைவர்கள் 3 பேரை விடுவித்ததும் தெரிந்தவையே. (இ-ஒ)

## ஆகாஷ் சோதனை வெற்றி

புதுடில்லி, ஜூலை 10

ஒரிஸா, சாந்திப்பூரில் உள்ள ஏவுகணைச் சோதனைத் திடலில் இருந்து நடத்தப்பட்ட நவீனமான 'ஆகாஷ்' என்ற நடுத்தர ஏவுகணையின் சோதனை வெற்றிகரமாக முடிந்துள்ளது.

25 கிலோ மீற்றர் உயரத்தில் உள்ள வான் இலக்கைத் தாக்கக் கூடியதாக 'ஆகாஷ்' ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது. (இ-ஒ)

# தென்மராட்சி வலயத்தில் உள்ள ஆவணங்களை மீட்டுவர முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 10

சாவகச்சேரி கல்வி வலய அலுவலகத்தில் உள்ள தென்மராட்சியைச் சேர்ந்த ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகளை எடுத்து வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் இதுவிடயமாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனுடன் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் இடம்பெயர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர் அரச அதிபருடன் கலந்துரையாடினார்.

ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை, 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மண்எண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

''தற்சமயம் எரிபொருள் விநியோகம் சிரமக்கப்பட்டுள்ளது. தாராளமாக மண்எண்ணெய் பெற முடியும் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் பங்கீட்டுக்கு மண்எண்ணெய் வழங்க முடியும்'' என்று அரச அதிபர் பதில் அளித்தார்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்விபயில கொட்டகைகள் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை பஞ்சலிங்கம் வலியுறுத்தினார்.

அதற்கு பதிலளித்த அரச அதிபர் தற்சமயம் உள்ள நிலையில் இரு நேரப் பாடசாலைகளை நடத்துவது நல்லது. தேவை ஏற்படும் பட்சத்தில் கொட்டகைகள் அமைக்கலாம் என்று தெரிவித்தார். (ஐ-3)

## சிவில் அலுவலகம் இடம் மாற்றம்

பருத்தித்துறை பிரிகேட் பகுதிக்குள் இயங்கிவந்த சிவில் நிர்வாக அலுவலகம் கடந்த சனிக்கிழமை தொடக்கம் பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் உள்ள கட்டடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டிருப்பதாக சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

## நாற்று மேடை அமைப்பு

நாரந்தனை, புளியங்கூடல் பகுதியில் தென்னம் நாற்று மேடை ஒன்று அமைக்கப்பட உள்ளது.

இதில் 200 கன்றுகளை பரீட்சார்த்தமாக நாற்று மேடை போடுவது என கடந்த வாரம் நடைபெற்ற ஊர்காவற்றுறை பிரதேச செயலக விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது (ஐ-73)

## கலந்துரையாடல்

காரைநகர், ஜூலை 10

யாழ். மாவட்டத்தில் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ஆரம்பநெறி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கும், ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டும் இதுவரை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத அனைவருக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ் புதிய உயர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

ஆரம்பக்கல்வி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-73)

## கடல் அணையின் பலகை திருட்டு

காரைநகர், ஜூலை 10

ஊர்காவற்றுறையில் அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தின் உதவியுடன் புளியங்கூடல் விவசாய சம்மேளனத்தால் அமைக்கப்பட்டு வரும் சுருவில் குறுக்குகடல் அணைக்காக பெறப்பட்ட பத்து ஆயிரம் ரூபா பெறுமதியான பலகை திருடர்களால் களவாடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-73)

## வடமராட்சியில் இயங்கும் தென்மராட்சிப் பாடசாலைகள்

தென்மராட்சி, ஜூலை 10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் சில வடமராட்சிப் பகுதியில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி நெல்லியடி கணித கல்வி நிலையத்திலும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி துன்னாலை ரலன்ஸ் கல்விநிலையத்திலும், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாலு சந்தி சதா பொன்ஸ் கல்வி நிலையத்திலும், பளை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை கரவெட்டி மாணவர் கலாசாலை கல்வி நிலையத்திலும் காலை நேர வகுப்புகளை நடத்தி வருகின்றன.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் துன்னாலை ஞானாசாரியார் கல்லூரியிலும், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்திலும் மாலை நேர வகுப்புகளை நடத்தி வருகின்றன

சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இன்று முதல் துன்னாலை டால்டன் கல்வி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா தெரிவித்தார்: (ஐ-117)

## வீதி, பொதுக் கட்டடங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வலி. கிழக்கு, ஜூலை 10

வலி. கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள் பொதுக் கட்டடங்களின் புனரமைப்பு வேலைக்கென புனர்வாழ்வு அமைச்சினால் 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதி மூலம் இப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் புனரமைக்கப் படவேண்டிய பிரதான வீதிகள். கட்டடங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் விரைவில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் எனவும் —

பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஜூலை 10

ஆனைக்கோட்டை நாவலடி அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும்.

புதன்கிழமை விசேட அபிஷேகம் பூசையை அடுத்து திருஊஞ்சல் திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறும். (இ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 10

மாதகல் வடக்கு காஞ்சிபுரம் அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை இடம்பெறும். (இ-30)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப்பெருமான் கோயிலில் நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு ''சயன ஏகாதசிவிரதம்'' விசேட அபிஷேகம், பூசை. வழிபாடுடன் நடைபெறும்.

பஜனை – கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் இடம்பெறும். (இ - 30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 10

அராலி மேற்கு வட்டுவத்தை அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தானத்தின் பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும்வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 10.15 மணி வரையான நேரத்தில் மஹா கும்பாபிஷேகம் கும்பாபிஷேக பிரதம குரு ''சிவாகம கிரியா திலகம்'' ச. மு. ரவிக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (இ-30)

## அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு 6 பிரிவுகளாக குழுக்கள் அமைப்பு

மூளாய், ஜூலை, 10

அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான விசேட செயலணிக்குழுக்கள் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் யாழ். செயலகமும் இணைந்து இக் குழுக்களை ஏற்பாடு செய்துள்ளன. ஆறு பிரிவாக இக்குழுக்கள் செயற்பட உள்ளன.

யாழ். குடாநாட்டில் செயற்படும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களையும் மற்றும் அரச திணைக்களங்களையும் இணைத்து இக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் அண்மைக்கால யுத்த அனர்த்தங்கள் மற்றும் இதனால் ஏற்பட்ட மக்களின்இடப்பெயர்வு போன்ற பெரிய அளவிலான அனர்த்தங்கள் மேலும் ஏற்பட்டால் விரைந்து செயற்படும் வகையிலேயே இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் யுத்த அனர்த்தங்களால் மக்களின் இடம்பெயர்வு ஏற்படும் பட்சத்தில் மக்கள் அதிக அளவில் சென்று தஞ்சமடையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் பகுதிகளில் இக்குழுக்கள் செயற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இக்குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனஇச்செயற்பாட்டின் முதற்கட்டமாக இப்பிரதேசத்தில் காணப்படும் பௌதிக வளங்களின் மதிப்பீடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி மதிப்பீட்டின் அடிப்படையிலும் இடம்பெயரும் மக்கள் வழமையாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைகள் போன்றவற்றை அடிப்படையாக வைத்தும் ஆறு தனித்தனியான குழுக்களாக இவை செயற்படத் தொடங்கியுள்ளன.

இடம்பெயரும் மக்களின் இருப்பிட வசதிகளைக் கவனிப்பதற்கான குழு, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தைக் கவனிப்பதற்கான குழு, உணவல்லாத பொருள்களின் விநியோகத்தை மேற்கொள்வதற்கான குழு, சுகாதார, மருத்துவ வசதிகளைக் கவனிப்பதற்கான குழு, இடம்பெயர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் மக்களுக்கான இடைத்தங்கல் வசதிகளைக் கவனிப்பதற்கான குழு, இடம்பெயரும் மாணவர்களின் கல்வி வசதிகளைக் கவனிப்பதற்கான குழு ஆகிய ஆறு குழுக்களுமே தற்போது அமைக்கப்பட்டு அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான பணிக்காகத் தயாராகி வருகின்றன. (ஐ-99)

## கூட்டம்

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தின் கூட்டம் ஒன்று இன்று மதியம் ஒரு மணியளவில் நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிர்வாகத்தைப் புதிய நிர்வாக சபையிடம் ஒப்படைப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. (ஐ-3)

## கிராம அலுவலர்கள் செயலகத்தில் கடமை

யாழ்ப்பாணம், ஜூலை 10

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அரியாலைப் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் நல்லூர் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அரியாலைப் பகுதியில் உள்ள மக்கள் கடந்த மாதங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்கின்றனர். அத்துடன் மக்கள் மீளக்குடியேறாத நிலையிலேயே கிராம அலுவலர் தமது கடமைகளை பிரதேசசெயலகத்தில் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-86)

## செய்தித் துளிகள்

### தரம் குறைந்த மருந்து விற்பனை

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கையில் தடை செய்யப்பட்ட தரநிர்ணயம் செய்யப்படாத மருந்து வகைகள் யாழ்ப்பணத்திலுள்ள சில மருந்து விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய மருந்துகள் விற்பனை செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட விற்பனை நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை செய்துள்ளனர். (இ-5)

### சுகாதார அதிகாரி பணிமனைஇடம்மாற்றம்

நெல்லியடி, ஜூலை 10

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தற்காலிகமாக வரணி மத்திய மருந்தகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இதேவேளை —

தென்மராட்சிப் பகுதியில் ஒரேயொரு வைத்தியசாலையாக இயங்கிவரும் இந்த வைத்தியசாலையில் மிருசுவில், கொடிகாமம் பகுதி மக்களும் அதிக எண்ணிக்கையில் தினமும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-109)

### தாய், சேய் சிகிச்சை நிலையம்

வடமராட்சி கிழக்கில் மீண்டும் தாய், சேய் சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையம் குடத்தனை உபதபால் நிலையத்திற்கு அருகில் இயங்கி வருவதாக அப்பகுதிப் பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (ஐ-109)

### கூட்டுறவுச் சங்கம் இடம் மாற்றம்

கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உரும்பிராய் தெற்கிலுள்ள கல்யாண மண்டபக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

கடந்த மாதம் தென்மராட்சியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து இச்சங்கம் இங்கு இடம்மாற்றப்பட்டது.

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள் வலி. கிழக்குப் பகுதியிலேயே தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ-154)

### அதிபர் நியமனம்

தென்மராட்சி, ஜூலை 10

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. கயிலைநாதன் கடந்த நான்காம் திகதி பொறுப்பேற்றுள்ளார். கல்லூரியின் அதிபர் க. சந்திரசேகரர் ஓய்வு பெற்றதை அடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை —

அல்லாரை அரசினர் வித்தியாலய அதிபர் செல்வி தி. வேலுப்பிள்ளை கொடிகாமம் அரசினர் வித்தியாலய அதிபர் என். திருநாவுக்கரசு ஆகியோர் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளனர். (ஐ-117)

## ராஜீவ் கொலை வழக்குக் குற்றவாளியான

# நளினியின் தண்டனைக் குறைப்பு

**ராஜீவ் கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட நளினிக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பரிந்துரைத்ததால் தமிழக அரசு விமர்சனத்தைச் சந்தித்தது. இது குறித்து 'இந்தியா டுடே' இதழில் *வாஸந்தி* எழுதிய கட்டுரை இது.**



சென்ற ஆண்டு மே11, ராஜீவ் கொலை வழக்கு விசாரணை மன்றத் தீர்ப்புப்படி மரண தண்டனை பெற்றிருந்த 26 பேரில் 19 பேரை குற்றமற்றவர்கள் என்று உச்சநீதி மன்றம் அறிவித்த நாள், "எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு என் வாழ்வில் இன்று சந்தோஷம் நுழைந்தது" என்று கண்களில் நீர்மல்க சொன்னார் நளினி என்று பெயர் கொண்ட அந்தப் பெண். அவரது கணவர் சுபா சுந்தரம் ராஜீவ் கொலை வழக்கில் 26 குற்றவாளிகளுள் ஒருவர் என்று மரண தண்டனை விதிக்கப்பட்டவர். வேலூர் சிறையில் அதே வழக்கில் மரண தண்டனைக் கைதியாக இருந்து வந்த அதே பெயர் கொண்ட இன்னொரு பெண்ணுக்கு ஏப்ரல் 25 நல்ல சேதி வந்தது. பெண்கள் தனிச்சிறை சூப்பிரண்டன் ராஜ சவுந்தரி அவரிடம் தூக்கு தண்டனையில் இருந்து ஆயுள் சிறையாகக் குறைக்கப்பட்ட விவரத்தை சொன்ன போது, "ரொம்ப சந்தோஷம்" என்றார் நளினி முருகன். ஆனால் சந்தோஷம் முழுமையானது அல்ல. அவரது கணவரின் தண்டனை குறையவில்லை. மரணத்தின் பிடியிலிருந்து நளினியைக் காப்பாற்ற பரிந்துரைத்ததற்கு அவர் 8 வயதுச் சிறுமியின் தாய் என்ற மனித நேயப் பார்வையே காரணம் என்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி விளக்கமளித்தாலும், அதில் உள்நோக்கம் இருப்பதாக எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன.

மரண தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பரிந்துரைப்பது என்ற முடிவை எடுப்பதில் ஏற்படக்கூடிய சிக்கல் அரசுக்குத் தெரிந்தே, இருந்தது. நாட்டையே உலுக்கிய படுகொலை அது. கொலைக்குக் காரணமான விடுதலைப் புலிகளுடன் ஒரு காலத்தில் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததற்காக இப்



*'நளினியை விடுதலை செய்து விடவில்லை. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.'*
- மு.கருணாநிதி
தமிழக முதல்வர்

பவும் விமர்சிக்கப்படுகிறது ஆளுங் கட்சி. ராஜீவ் கொலை நடந்த உடனேயே புலன் விசாரணை செய்ய (எஸ்.ஐ.டி.) அழைக்கப்பட்ட போது "நான் என்னையறியாமல் அது எல்.டி.டி.ஈயின் செயலாக அது இருக்கக் கூடாது என்று வேண்டிக் கொண்டேன்" என்று டி.ஆர்.கார்த்திகேயன் நினைவு கூர்ந்தார். அவரைத் தொடர்பு கொண்டபோது, "ஏனென்றால் அவர்கள் சம்பந்தப்பட்ட குற்றத்தைப் புலன்விசாரணை செய்வது ரொம்பக் கஷ்டம். தவிர அதன் பின் விளைவுகளைப் பற்றியும் நான் பயந்தேன்."

26 பேரில் 3 பேருக்கு ஆயுள் தண்டனை அளித்து 19 பேரை விடுவித்த உச்சநீதிமன்றம் நளினி, அவரது கணவர் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வருக்கும் மரண தண்டனையை திட்டவட்டமாக அளித்தது. ஆனால் தீர்ப்பளித்த குழுவில் இருந்த கே.டி. தாமஸ், டி.பி.வாத்வா, எஸ்.எஸ்.எம் குவாத்ரி ஆகிய மூன்று நீதிபதிகளில் நீதிபதி தாமஸ் எழுப்பிய கேள்வி பின்னால் நளினியின் தண்டனைக் குறைப்புக்கு செய்த பரிந்துரைக்குப் பெரிதும் வழி வகுத்தது என்று சொல்ல வேண்டும். "நளினி சூழ்ச்சியில் சொன்னபடி நடந்து கொண்ட கூட்டாளியே தவிர முக்கிய பங்கு வகிக்கவில்லை" என்றார் தாமஸ். ஆனால் மற்ற நீதிபதிகள் அதை ஏற்கவில்லை. கொலைச் சூழ்ச்சியில் விவரம் அறிந்தே ஒப்புதலுடன் செயல்பட்ட நளினிக்கு தண்டனை அளிக்கப்படாவிட்டால் நீதியே சிறுத்துப் போகும் என்றார்கள். அப்பொழுதுதான் நீதிபதி தாமஸ் குழந்தை அம்சத்தைக் கொண்டு வந்தார். நளினியின் குழந்தைக்குத் தகப்பனான முருகனுக்கும் மரண தண்டனை விதித்திருப்பதால் குழந்தை அநாதையாகிப் போகும் என்றும் நளினியை அதனாலேயே மரண தண்டனையிலிருந்து காப்பாற்றவேண்டும் என்றார். ஆனால் மற்ற இருவரும் அதை ஏற்காததால் நளினிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

"முதலில் வழங்கப்பட்ட தீர்ப்பு 'தடா' கோர்ட்டில் வழங்கப்பட்டது. அதில் நிறையக் குறைகள் இருந்தன" என்கிறார் வழக்கறிஞர் கே. சந்துரு. நால்வரின் கருணை மனுவினை கவர்னர் நிராகரித்தபோது அதை எதிர்த்து அவர்கள் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்காடியவர் "அதன் செயல் முறைகள் சர்வதேச மன்றங்களில் ஏற்கப்படாதவை. குற்றத்தில் இரண்டு வகை. நேரிடையாக சம்பந்தப்பட்டவர்கள். நேரிடையாக சம்பந்தப்படாதவர்கள். இந்த நால்வரும் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள். நேரிடையாக இந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் விசாரணைக்கு முன்பே இறந்து போனார்கள். தடா கோர்ட்டில் 26 பேருக்கும் மரண தண்டனை கிடைத்தது எங்கும் கேள்விப்படாதது." தடா கோர்ட்டின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் 'சட்டக் கொலை' என்றது. உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்யவில்லையென்றால் 26 பேரும் தூக்கில் தொங்க நேர்ந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் நளினியின் தண்டனையைப் பற்றி நீதிபதி தெரிவித்த கருத்துக்கள் அவருடைய தலையெழுத்தை மாற்றக் கூடிய அளவுக்கு ஓர் அனுதாப அலையை எழுப்பிற்று. அவர்களை மரண தண்டனையிலிருந்து விடுவிக்க விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் அனுதாபிகள் எல்லாம் சேர்ந்து மனித கோஷம் எழுப்பக் காரணம் ஆயிற்று. தமிழ் எழுத்தாளர்கள் பலரை அழைத்து மரண தண்டனை என்பது மனித உரிமைக்கு எதிரானது என்ற ஒருமித்த குரல் எழுப்ப வைத்தார்கள்.

உயர்நீதி மன்றம் கவர்னருக்கு தன்னிச்சையாக முடிவெடுக்க அதிகாரமில்லை என்றும், அவர் அரசு அமைச்சரவையின் ஆலோசனையின் பேரிலேயே முடிவெடுக்கலாம் என்றும் சொன்னது. இதற்கிடையே நளினிக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று சோனியா காந்தியே ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியது பலருக்கு வியப்பையும் நெகிழ்வையும் ஏற்படுத்தியது. இதையெல்லாம் கருத்தில் கொண்டே கவர்னருக்கு தமது அரசு, நளினியின் தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று பரிந்துரைத்ததாகக் கருணாநிதி சொல்கிறார். "நளினிக்காகப் பரிந்து பேசிய நீதிபதி தாமஸ் கொலையை ஆதரித்தார் என்று சொல்வீர்களா?" என்கிறார்.

ஆனால் எதிர்க்கட்சிகள் சும்மா இல்லை. ஜெயின் கமிஷன் அறிக்கையை இழுக்கின்றன. ஆளுங் கட்சி இப்படிப் பரிந்துரைத்தது சந்தேகத்தை ஏற்படுத்தும் என்றன. கூட்டணி உறுப்பினரான ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் "தண்டனை குறைக்கப்பட்டது மிகவும் தவறான முன்னுதாரணமாக வரலாற்றில் இடம்பெற்று விடும்" என்கிறார். பெண் என்கிற காரணத்தால் தண்டனை குறைக்கப்பட்டால் இனி பெண்களையே இப்படிப்பட்ட கொலை பாதகங்கள் செய்ய வன்முறைக் குழுக்கள் அனுப்பும் என்ற வாதத்தை த.மா.கா. எழுப்புகிறது. "நா அப்படி நினைக்கல்லே" என்கிறார் சந்துரு. "என்னிக்குத் தற்கொலை படையின்னு அவங்க ஆரம்பிச்சாங்களோ அவங்களுக்கு உயிர் ஒரு பொருட்டே இல்லை. அவங்களோ தங்க ஆட்களுக்கு மரணதண்டனை கொடுத்துடறாங்க" இப்போது நளினிக்கு ஆயுள் தண்டனையில் மிச்சமிருக்கும் காலத்தை குறைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. 1978 குற்றவியல் நடைமுறைச் சட்டம் (433A) திருத்தத்தின்படி ஆயுள் தண்டனை என்பது 14 ஆண்டுகள் முடிந்த பிறகுதான் மறுபார்வைக்கு எடுக்கமுடியும். இப்போது நளினியின் மரண தண்டனையை ரத்துசெய்து ஆயுள் தண்டனை வழங்கியிருப்பது சட்டசாசன அதிகாரம் கொண்ட கவனர் என்பதால் ஆயுள் தண்டனைக் காலத்தை முன்னதாகவே குறைக்க வழியுண்டு என்கிறார் சந்துரு. மற்ற மூவருக்கும் கருணை மனு ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி அமைச்சரவையைக் கலந்தாலோசித்து விட்டுத்தான் முடிவைச் சொல்ல முடியும். அதற்கு நான்கு மாதங்களாவது ஆகும். அதுவரை மரணதண்டனை நிறுத்தி வைக்கப்படும்.

"நாங்கள் 80களில் இருந்து மரணதண்டனையை எதிர்க்கிறோம்" என்கிறார் ம.தி.மு.க. செய்தித் தொடர்பாளர் ராதாகிருஷ்ணன். ஆனால் விடுதலைப் புலிகளுக்கு மிகவும் நெருக்கமானவர் என்று அறியப்பட்ட வை.கோ. இப்போது அதைச் சொல்லும்போது, உள் நோக்கத்துடன் சொல்லப்படுவதாக அரசியல் சர்ச்சை எழுவது தவிர்க்க முடியாதது. ஏற்கனவே வை.கோவின் வெளிப்படையான புலிகள் ஆதரவு பேச்சினாலும், சமீபத்தில் ஜெனீவாவில் நடந்த புலிகள் ஆதரவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டதுமில்லாமல் சந்திரிகாவை கொலை செய்யப் புலிகள் முயன்றது சரி என்கிற ரீதியில் (அது தவறாகப் பிரசுரிக்கப்பட்டதாக வை.கோ. மறுத்தாலும்) பேசியதான குற்றச்சாட்டாலும் கருணாநிதிக்குச் சங்கடம்.

"நாட்டில் நடந்த ஒரு மாபெரும் சோகத்தை அரசியல் கட்சிகளெல்லாம் புலன் விசாரணைக்காலத்தில் தங்கள் சுயலாபத்துக்காக எப்படி உபயோகித்துக் கொண்டன என்பது மிகுந்த துக்கத்தை அளித்தது" என்கிறார் புலன் விசாரணை நடத்திய கார்த்திகேயன். இன்றும் அதேதான் நடக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இந்த வழக்கால் இதுவரை காணாத அளவு மரணதண்டனை குறித்து சர்ச்சை கிளம்பியுள்ளது. எதிர்கால தீர்ப்புகளில் இது பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

*பயங்கரவாதக் குற்றவியல் தடுப்புக்கான விசேட 'தடா' நீதிமன்றத்தில் 26 எதிரிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் 19 பேரை உச்ச நீதிமன்றம் விடுவித்துத் தீர்ப்பளித்தது.*

*'தடா' நீதிமன்றம் 26 பேருக்கு மரண தண்டனை விதித்த முறை முன்னர் எங்கும் கேள்விப்படாதது. அந்தத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் 'சட்டக் கொலை' என விமர்சித்தது. உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்யவில்லை என்றால் 26 பேரும் தூக்கில் தொங்க நேர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.*

# மகள் தந்த வரம்


ராஜீவ் கொலை வழக்குக் குற்றவாளியான நளினிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை குறைக்கப்பட்டதற்குக் காரணமான அவரது மகள் - 8வயதுச் சிறுமி - இப்போது யாழ் குடாநாட்டில் வசிக்கிறார் என உள்ளூர்த் தகவல்கள் கூறுகின்றன.

நளினியோடு அவரது தாயார் மற்றும் குடும்பத்தவர்கள் ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் சிக்க, சிறையில் பிறந்த நளினியின் குழந்தையை குழந்தையின் தகப்பனான முருகனின் உறவினர்களே பெறுப்பேற்றனர். அக்குழந்தை முருகனின் தாயகமான வடக்கு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. தென்மராட்சியில் கிளாலிப் பகுதியில் தனது அப்பம்மாவுடன் வளர்ந்து வந்த இச்சிறுமி இப்போது தனது உறவினர்களுடன் அங்கிருந்து இடம் பெயர்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.



நீதியரசர்கள் கே.டி.தாமஸ், சையட் ஷா மொகமட் குவாத்ரி மற்றும் டி.பி.வாத்வா

## மரண தண்டனையை எதிர்நோக்கும் மூவர்



பேரறிவாளன் முருகன் சாந்தன்

## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2000
## வினாத்தாள் இல. 2

**தரம் 5** **பகுதி I** **நேரம்:- 45 நிமி.**

**★ பின்வரும் சொற்கூட்டங்களில் நான்கு சொற்களுக்கிடையே ஏதோ ஒரு வித தொடர்பு உண்டு. தொடர்பற்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. விசும்பு, கானகம், விண்ணகம், வானம், விண்வெளி.
2. காடு, வனாந்தரம், அடவி, கானகம், நந்தவனம்.
3. வீராங்கனை, மைத்துனி, புத்திரன், புத்திரி, செல்வி.
4. மடமட, கலகல, குடுகுடு, கடகட, சடுகுடு.
5. அக்கம்பக்கம், அல்லும்பகலும், அங்குமிங்கும், கட்டுக்கட்டாக.

**★ கீழே காணப்படும் இரு வரிசைகளும் சமமாயின் (ச) எனவும் சமனற்றதாயின் (பி) எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

6. அ ப B ம D ஆ --- அ ம E ப F ஆ ( )

7.  ( )

8.  ( )


9. ÓREAЄQ --- ÓREAЄQ ( )

*** கமலி, விமலி, ராஜி, ஆகிய மூவரும் அப்பம், பிட்டு, தோசை உணவை விரும்பி உண்பார்கள். கமலி, அமலி, ராஜி இட்லி, தோசை, பிட்டு ஆகிய உணவை விரும்பி உண்பார்கள். கமலி, விமலி, சுகி, ராஜி நால்வரும் அப்பம், தோசை ஆகிய உணவை விரும்பி உண்பார்கள்.**

இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்கவும்.

10. எல்லா உணவுகளையும் விரும்பும் இருவர் யார்?
*(1) கமலி,விமலி (2) கமலி,ராஜி (3) கமலி,அமலி*
*(4) அமலி,சுகி (5) கமலி,சுகி*
11. எல்லோராலும் விரும்பி உண்ணப்படும் உணவுவகை எது?
*(1) அப்பம் (2) பிட்டு (3) தோசை*
*(4) இட்லி (5) எதுவுமில்லை*
12. அப்பத்தை விரும்பி உண்ணாதவர் யார்?
*(1) கமலி (2) விமலி (3) ராஜி*
*(4) அமலி (5) சுகி*


**★ கீழுள்ள மூன்றுவாக்கியங்களும் சில குறியீடுகள் மூலம் காட்டப்படுகின்றன. வாக்கியத்தில் சொற்கள் அமைந்த ஒழுங்கில் சில குறியீடுகள் அமையவில்லை.**






மேலே தரப்பட்ட விடயங்களை அவதானித்து பின்வரும் சொற்களைக் குறிக்கும் குறியீடுகளை வரைக.


13. அம்மா = --------------------
14. மாமி = --------------------
15. உணவு = --------------------
16. சமைத்தாள் = --------------------
17. முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் காட்டப்படும் போது மாற்றம் காணப்படாத எழுத்தின் கீழ் புள்ளடி இடுக.
B C X D

**★ பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்து தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.**

18. 

19. 


20. 

21. 

**★ பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையை வெற்றிடத்தில் எழுதுக.**

22. 6, 9, 0, 8, இந்த எண்கள் நான்கையும் பயன்படுத்தி எழுதக்கூடிய கூடுதலான பெறுமானமுள்ள நான்கு இலக்க எண் யாது? --------------------

**★ கீழே தரப்பட்டுள்ள கூட்டினுள் உள்ள திண்மங்களின் நிறைகள் ஒவ்வொரு கூட்டின் கீழும் தரப்பட்டுள்ளன. அதற்கமைய கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**






23. கனவுருவின் நிறை யாது? ..........................
24. சதுரமுகியின் நிறை யாது? ..........................
25. நான்முகியின் நிறை யாது? ..........................
26. உருளையின் நிறை யாது? ..........................

**★ பின்வரும் ஆங்கில எழுத்துக்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் வகுப்பறையுடன் தொடர்புடைய சொற்கள் உருவாகும். அவற்றைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


27. MOROCSLAS = ..........................
28. RETAHCE = ..........................
29. DOBABRACLK = ..........................
30. TSDUNET = ..........................

**★ கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31. 
இவ்வுருவில் காணப்படும் மிகக்கூடிய முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?
..........................

32. ரவியிடம் 16 இனிப்புக்கள் இருந்தன. அவற்றுள் 1/4ஐ ரவி தம்பிக்குக் கொடுத்தான். தம்பி அவற்றில் மூன்று இனிப்புக்களை தங்கைக்குக் கொடுத்தாள். தம்பியிடம் எஞ்சியிருக்கும் இனிப்புக்கள் எத்தனை? ..........................
33. முப்பத்தியொரு நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தின் முதலாம் திகதி புதன்கிழமையில் ஆரம்பித்தால் அம்மாதத்தில் உள்ள வெள்ளிக்கிழமைகளின் எண்ணிக்கை யாது?
..........................
34. முற்பகல் 6 மணியைக் காட்டும் கடிகார முட்களின் மணிமுள் பிற்பகல் 3 மணியைக் காட்டுவதற்கு வட்டக்கடிகார முகத்தின் முழு உருவின் என்ன பங்கைக் கடக்க வேண்டும்?
..........................
35. சதுரக்கடதாசி ஒன்று அருகில் உள்ளவாறு நான்காக மடிக்கப்பட்டு கத்தரிக்கோலால் வெட்டப்பட்டது.


இக்கடதாசியை விரித்தால் தோற்றமளிக்கும் உருவம்



**மிகவும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

36. வெப்பம் ஏற்றும் போது உருகும் பொருள்
(மெழுகு, உப்பு, கல், ஓடு)
37. இயற்கை ஒளிமுதல்
(சந்திரன், விளக்கு, சூரியன், மின்குமிழ்)
38. சூழலில் உள்ள பொருட்களில் உக்காத பொருள்
(இலைகுழை, ஓலை, பொலித்தீன்உறை, கடதாசி)
39. ஐஸ்கிறீம் உருகாது பாதுகாக்கும் பெட்டி
(தகரப்பெட்டி, அலுமினியப்பெட்டி, ரெஜிபோம்பெட்டி,, பிளாஸ்ரிக் பெட்டி)
40. பனிக்கட்டி நீராக மாறும்போது நடைபெறுவது
(ஆவியாதல், உருகுதல், உறைதல், ஒடுங்குதல்)

## பகுதி II

**நேரம்:- 1மணி 15 நிமி.**

**★ பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகு குடி அப்பா
ஏழை நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா.

1) இப்பாடலில் கூறப்பட்டதற்கமைய சுத்தத்தைப் பேணுவதால் அடையக்கூடிய இரண்டு நன்மைகள் எழுதுக?
..........................
2) இப்பாடலைப் படிக்கும்போது நினைவிற்கு வரும் பழமொழியை எழுதுக?
..........................
3) நீண்ட ஆயுளைப் பெறுவதற்கு கவிஞர் கூறும் வழிகள் இரண்டு எழுதுக?
..........................
..........................
4) பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துடைய சொற்களை மேலே தரப்பட்ட பாடற்பகுதியிலிருந்து பெற்று எழுதுக?
தூய்மை.......................... தினம்..........................
வறியவர்..........................
5) பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்தை எழுதுக?
சுத்தம்.......................... நீண்ட ..........................
சுகம்.......................... ஏழை ..........................
6) பின்வரும் சொற்களின் பன்மைச் சொற்களை எழுதுக?
நீ.......................... அதனை..........................
ஏழை.......................... அப்பா..........................
7) மேலே உள்ள பகுதியில் இருந்து
பெயர்ச் சொல் ஒன்று..........................
வினைச்சொல் ஒன்று.......................... எழுதுக.
8) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை பாடலில் இருந்து பெற்று எழுதுக.
You.......................... Night..........................
Sleep.......................... Clean..........................
9) தனியார் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றில் தொங்க விடப்பட்டிருந்த தொலைபேசிச் சேவைக்கட்டண விவரம் வருமாறு:-

| | 3நிமிடங்கள் | மேலதிக ஒவ்வொரு நிமிடத்திற்கும் |
|---|---|---|
| உள்ளூர் அழைப்புக்கள் | ரூபா 4/= | ரூபா 2/= |
| வெளி மாகாணங்கள் | ரூபா 12/= | ரூபா 5/= |
| வெளிநாடு | ரூபா 90/= | ரூபா 45/= |

9) விமல் 4 நிமிடங்களுக்கு உ
தார். ஆயின் கட்டவேண்டி
எவ்வளவு? ..........................
10) மூன்று நிமிடங்களுக்கு உள்
தும் தொகைபோல எத்தனை
நிமிட சேவைகளுக்கு அறவி
11) ஜேர்மனியில் உள்ள ஒருவ
பேசியில் கதைத்தால் செலு
..........................
12) ரவி உள்ளூரில் உள்ள தன்
கதைத்துவிட்டு ரூபா 20ஐச்
மாமாவுடன் கதைத்த நேரம்
13) 8.58 நிமிடத்துக்கு கதைக்க
கதைத்து முடித்தாராயின் அ
..........................
14) இலங்கையின் நேரம் காலை
போது ஜேர்மனியில் கடிகா
காட்டியது. ரவி தனது உ
தொலைபேசியில் உரையாடி
காலை 8.00 மணி எனக் கா
பேசியில் உரையாடியபோது
..........................

**★ குமார் என்னும் ஒரு இளை
தனது மாதச் சம்பளத்தை
விடும் முறையை அருகே உ
வரைபு காட்டுகின்றது. அத
மைய கேட்கப்படும் வினாக்களு
உரிய விடையைப் புள்ளிக்கோட்
எழுதுக.**

15) குமார் தனது வருமானத்தில்
..........................
16) குமார் காற்சட்டை, சேட், ப
செலவிடும் பணம் அவரின்
..........................
17) குமார் வங்கியில் சேமித்த தொ
தொகைக்குச் சமனாகும்?..........
18) குமார் வங்கியில் சேமித்த
டைவை, அலங்காரப் பொரு
தொகை யாது? ..........................
19) மேலே கூறப்பட்ட தொகையி
யாது? ..........................

**★ பின்வரும் உருகாட்டுவது சுதன
கருவியாகும். அதற்கமைய கே
விடையளிக்குக.**

20) இந்த அமைப்பை எவ்வாறு
அழைப்பர்? ..........................
21) இது ஓர் இசைக்கருவி வகை
யைச் சார்ந்தது எனக் கூறல
..........................
22) இப்போத்தல்களின் உள்ளே
..........................
23) இந்த இசைக்கருவியில் ஒலி
..........................

**★ 'அ' பகுதியில் தரப்படும் விடயத்
தெரிவு செய்து அதற்கு நேர
இலக்கத்தை இடுக.**

அ

24) யாதேனும் ஒரு பொருளி
அந்தத்திலிருந்து மற்றைய
வரை வெப்பம் பயணம் செ
25) ஒலி ஒன்று சிறிது நேரத்தில்
பட்டுத் தெறித்து வந்து
ஒலித்தல்.
26) அச்சு ஒன்றை மையமாகக் ெ
சுழலும் உருளை.
27) ஒளியின் பயணப்பாதையில்
புகாப் பொருள் ஒன்று வைக்க
போது உண்டாவது.

**★ கீழே தரப்பட்டிருக்கும் விளை
யாட்டுக்களை வேறாகவும் த
கவும் அட்டவணைப்படுத்துக.**
(நீளம் பாய்தல், உயரம் ப
மீற்றர் ஓட்டம், அஞ்சலோட்டம்,
கயிறிழுத்தல், துடுப்பாட்டம்,

| தனிவிளையாட்டு |
|---|
| (28) .......................... |
| (29) .......................... |
| (30) .......................... |
| (31) .......................... |
| (32) .......................... |

**★ உலகிலுள்ள எல்லா நாடுகளு
சவங்களைக் கொண்டாடுகின்
தேசியரீதியானவை, நினைவு
னவை, பாடசாலைக்குரியவை
கொண்டாடப்படுகின்றன.**
அடுத்துள்ள அட்டவணையில்
எந்த நிரலில் அடங்கும் எனக்
உரிய நிரலிலே ( ✓ ) அ

**தயாரிப்
யாழ். இந்து ஆரம்
ஆசிரியர்**

4 நிமிடங்களுக்கு உள்ளூர் தொலைபேசியில் கதைத் ஆயின் கட்டவேண்டிய தொலைபேசிக் கட்டணம் ாவு? ..............................

நிமிடங்களுக்கு உள்ளூர் அழைப்புகளுக்கு செலுத் தாகைபோல எத்தனை மடங்கு வெளிமாகாண மூன்று சேவைகளுக்கு அறவிடப்படுகின்றது? ..............

னியில் உள்ள ஒருவருடன் 5 நிமிடங்கள் தொலை ல் கதைத்தால் செலுத்தவேண்டிய கட்டணம் யாது?

..............................

ள்ளூரில் உள்ள தன் மாமாவுடன் குறிப்பிட்ட நேரம் துவிட்டு ரூபா 20ஐச் செலுத்தினான். எனவே ரவி டன் கதைத்த நேரம் யாது? ..............


மிடத்துக்கு கதைக்க ஆரம்பித்த ஒருவர் 9.03க்குக் து முடித்தாராயின் அவர் உரையாடிய காலம் யாது?

..............................

கையின் நேரம் காலை 10.00 மணியாக இருக்கும் ஜேர்மனியில் கடிகாரம் காலை 6.00 மணி எனக் பது. ரவி தனது உறவினருடன் ஜேர்மனிக்குத் லபேசியில் உரையாடும்போது ஜேர்மனியின் நேரம் 8.00 மணி எனக் காட்டியது. எனவே ரவி தொலை ல் உரையாடியபோது இலங்கையின் நேரம் யாது?

..............................

**என்னும் ஒரு இளைஞர் மாதச் சம்பளத்தை செல முறையை அருகே உள்ள காட்டுகின்றது. அதற்க கட்கப்படும் வினாக்களுக்கு விடையைப் புள்ளிக்கோட்டில்**




னது வருமானத்தில் கூடிய பங்கை என்ன செய்வார்?

..............................

காற்சட்டை, சேட், பவுடர் போன்றவற்றை வாங்கச் டும் பணம் அவரின் வருமானத்தின் என்ன பங்கு?

..............................

வங்கியில் சேமித்த தொகை, வேறு எந்தச் செலவின் க்குச் சமனாகும்?..............


வங்கியில் சேமித்தது ரூபா 500 ஆயின் உடுப ., அலங்காரப் பொருள்களுக்குச் செலவு செய்த யாது? ..............

கூறப்பட்ட தொகையின்படி அவரின் முழுச்சம்பளம்

..............................

**உருகாட்டுவது சுதனால் செய்யப்பட்ட விளையாட்டுக் ாகும். அதற்கமைய கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ளிக்குக.**

அமைப்பை எவ்வாறு பர்? ..............



் இசைக்கருவி வகை சார்ந்தது எனக் கூறலாமா?

..............................

த்தல்களின் உள்ளே இருப்பது யாது?

..............................

இசைக்கருவியில் ஒலி எவ்வாறு தோன்றுகின்றது?

..............................

**யில் தரப்படும் விடயத்துடன் தொடர்புடைய கூற்றைத் செய்து அதற்கு நேரே உள்ள கூட்டிற்குள் உரிய ந்தை இடுக.**

| அ | | ஆ |
|---|---|---|
| னும் ஒரு பொருளின் ஓர் திலிருந்து மற்றைய அந்தம் வெப்பம் பயணம் செய்தல். | ☐ | 1. கப்பி |
| று சிறிது நேரத்தில் தடைப் தெறித்து வந்து மீண்டும் ். | ☐ | 2. நிழல் |
| ன்றை மையமாகக் கொண்டு உருளை. | ☐ | 3. எதிரொலி |
| ் பயணப்பாதையில் ஒளி பாருள் ஒன்று வைக்கப்படும் உண்டாவது. | ☐ | 4. வெப்பக் கடத்துகை |

**ரப்பட்டிருக்கும் விளையாட்டுக்களை குழு விளை களை வேறாகவும் தனி விளையாட்டுக்களை வேறா ட்டவணைப்படுத்துக.**

பாய்தல், உயரம் பாய்தல், வலைப்பந்து, 100 ட்டம், அஞ்சலோட்டம், குண்டெறிதல், மரதன்ஓட்டம், ந்தல், துடுப்பாட்டம், பூப்பந்து)


| விளையாட்டு | குழுவிளையாட்டு |
|---|---|
| .............. | .............. |
| .............. | .............. |
| .............. | .............. |
| .............. | .............. |
| .............. | .............. |

**ள எல்லா நாடுகளும் பல்வேறு விதங்களில் உற் ளக் கொண்டாடுகின்றன. அவை மதசார்பானவை, பானவை, நினைவு தினங்கள், சர்வதேச ரீதியா பாடசாலைக்குரியவை, தனிப்பட்டவை என்றவாறு டப்படுகின்றன.**

ள அட்டவணையில் தரப்பட்டுள்ள உதாரணங்கள் யில் அடங்கும் எனக்கண்டு உற்சவத்துக்கு நேரே ரவிலே ( ✓ ) அடையாளமிடுக.

| உற்சவங்கள் | மதம் சார்பானவை | தேசிய ரீதியானவை | நினைவு நாள் | சர்வதேச ரீதியானவை | பாடசாலை ரீதியானவை | தனிப்பட்டவை |
|---|---|---|---|---|---|---|
| (33) பிறந்தநாள் | | | | | | |
| (34) பொசன் தினம் | | | | | | |
| (35) தைப்பொங்கல் | | | | | | |
| (36) பரிசளிப்பு விழா | | | | | | |
| (37) திருமண வைபவம் | | | | | | |
| (38) சுதந்திர தினம் | | | | | | |
| (39) உலக சிறுவர் தினம் | | | | | | |
| (40) நத்தார் தினம் | | | | | | |
| (41) பண்டாரநாயக்க தினம் | | | | | | |
| (42) இல்ல விளையாட்டு | | | | | | |
| (43) கலை விழா | | | | | | |

(44) இவ்வுரு காட்டுவது ஆக்கத் தொழிற் பாட்டின் தையல் வகையைச் சார்ந்தது ஆகும். இந்த தையல் வகையின் பெயரை எழுதுக.



..............................

(45) அலங்கார சித்திர வடிவத்தினால் அமைக்கப்பட்ட துணித் துண்டு ஒன்றின் மாதிரி வடிவம் இங்கு காட்டப்பட்டுள்ளது. இதில் வரையப்பட்டுள்ள அமைப்பின் பெயரை எழுதுக?



..............................

★ **'எனக்கும் தொலைக்காட்சியில் பேசும் வாய்ப்பு கிடைத்தால்' என்னும் தலைப்பில் எட்டு வாக்கியங்கள் எழுதுக?**

(46 - 53) ..............................

..............................

..............................

..............................

..............................

..............................

..............................

..............................

..............................

..............................

..............................

..............................


..............................

..............................

**தயாரிப்பு:-**
**இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் குழு**

# இதோ ஒரு விளையாட்டு!

**பரீட்சை வினாத்தாளினால் மனம் கனத்திருக்கும் மாணவருக்கு இதோ ஒரு விளையாட்டு. இலக்க வரிசைப்படி புள்ளிகளை இணைத்து ஒளிந்துள்ள படத்தை வெளியே கொண்டு வாருங்கள்.**



## வாசகர் கடிதங்கள்

### கப்பற் போக்குவரத்துப் பிரச்சினை எப்போது நீங்கும்?

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையே யான போக்குவரத்துக்கு "சிற்றி ஓவ் றிங்கோ" கப்பலே தான் இப்போது ஈடுபட்டு வருகிறது. இக்கப்பலில் 350 பயணிகள் ஒரே தடவையில் பயணம் செய்ய முடியும். இக்கப்பல், கிழமைக்கு இரு தடவைகள் மட்டுமே பயணி களை ஏற்றியிறக்கும் சேவையில் ஈடுபடுகின்றது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு சிவில் காரியா லயத்தில் ஐயாயிரத்திற்கும் (5000) மேற்பட்ட பயணிகள் பதிவு செய்து விட்டு, மாதக் கணக்காக காத்திருந்து தற்போது ரிக்கெற்றைப் பெறுவதற்காக யாழ். சிவில் காரியாலத்திற்கு அலைந்து திரிகிறார்கள். தூர இடங் களிலிருந்து காலையில் இருட்டோடு இருட்டாக வீட்டி லிருந்து புறப்பட்டு, ரிக்கெற்றை பெறமுடியாமலோ அல் லது அடுத்த கப்பலிற்கான பதிவுகளை செய்து கொள்ள முடியாமலோ மனவேதனையோடு வீடு திரும்புகின்றார்கள். இவர்களில் பெரும்பாலான மக்கள் கிழமைக்கணக்காக அலைந்து திரிகின்றார்கள். இவர்கள் பல்வேறு அவசிய தேவைக்காக கொழும்பு செல்வதற்கு வயது வேறு பாடின்றி பெருங்கஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். இவர்க ளினது கஷ்ட நிலைமையை கவனத்திற் கொண்டு சம் பந்தப்பட்ட அதிகாரிகள் 'லங்கா முடித்த' கப்பலையும் பயணிகள் சேவைக்காக மேலதிகமாகப் பயன்படுத்தலாம் அல்லவா? இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா?

*இ. தாசன்*
*கோண்டாவில்*

### காரைநகர் பஸ்சேவை

காரைநகர் பிரதேச மக்களின் போக்குவரத்துக்கான தனியான பஸ்டிப்போ ஒன்று இயங்கி வருவது தெரிந்த விடயம். ஆனாலும் காரைநகரிலிருந்து காலை 7 மணிக்கு ஆரம்பிக்கும் முதல் பஸ் 785 பாதையினால் சென்று யாழ்ப்பாணம் சேர 9.30 மணியாகிறது. ஆதலால் யாழ்ப் பாணத்திற்கு கடமைக்கு செல்லும் அரச, தனியார் ஊழியர் கள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் ஆகியோர் நேரம் பிந்தியே உரிய இடங்களுக்கு செல்ல நேரிடுகிறது. இதற்கு மாற்றீடாக பொன்னாலையில் இருந்து காலையில் ஆரம்பிக்கும் 786 பாதை பஸ்ஸினை காரைநகரில் இருந்து ஆரம்பித்து விரைவான சேவையை நடத்திப் பயணிகளுக்கு உதவுமாறு பயணிகள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகருக்கு நண்பகல் 12.30 மணிக்கு பிற்பாடு பி.ப 4.45 மணிக்கே பஸ் சேவை நடைபெறுகின்றது. ஆனால் 786 பாதையில் பொன்னாலை மட்டும் இரண்டு பஸ் சேவைகள் நடை பெறுகின்றன. இவற்றுக்கு மாற்றீடாக காரைநகருக்கான ஒரு சேவையை இடையில் நடத்தினால் காரைநகர் பயணி கள் நன்மை பெறுவர்.

காரைநகருக்கு எந்த ஒரு தனியார் பயணிகள் சேவை யும் நடைபெறுவதில்லை என்பதனைக் கவனத்தில் கொள் வதும் அவசியம்.

காரைநகரைச் சேர்ந்த
பயணிகள் சார்பில்
14 பேர் ஒப்பமிட்டுள்ளனர்.

## வாசகர் உள்ளம்

### உதயனால் உதித்த குறள்

★ உதயனே உன்னோடுறவாடி மகிழ்ந்த வென்
இதயத் தெழுந்த திவை.

★ அப்பப்பா நீ தரும் ஆசிரியத் தலையங்க மதை
எப்பப்பா காண்போ மினி?

★ மாணவர்க்கு மண்மீது நீயுழைக்கும் மாண்பினை
காட்டியதுன் கடந்தகால ஏடு.

★ சர்வமத சம்மதமாம் சான்றோர் போதனைகள்
எம்மவர்க்கு ஏற்றம் தரும்.

★ நாலுபத்து ஓரைந்து நாள்கள் தவமிருந்தோம்
நாலகத்தில் நினைக் காண்பதற்கு.

★ உன்னூழியரென்ன வுன் வாசகர்கூட
நின்னை விட்டகலார் நினை.

★ நாலு காசிருந்து நாமடித்து விற்பதெல்லாம்
நூலாகி விடுமோ நுகர்.

★ ஏழுத்தில் வெளிவரும் ஏடெல்லாம் ஏடல்லவெம்
உளத்தில் உதயனே ஏடு.

★ உதயனே உன்தடை தடையல்ல மாறாக
உன் வளர்ச்சிக் கூறும்.

★ பத்தரை மாற்றுத் தங்கமென வெம்முதயா
இத்தரை மீதென்று முதி.

*- வயலையூரான் -*

### பெருமகிழ்ச்சி மக்களுக்கு!

**'உதயன்' மீண்டும் வெளிவருவது யாருக்கு வசந்தம் வந்த மாதிரி. தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சி.**

**நீதி, நிதானம், நேர்மை, துணிவு ஆகியவை ஒருங் கமைந்த தொடர்பு சாதனங்களின் முன்னணியில் நிற்பது 'உதயன்'.**

**"மக்கள் குரல் மகேஸ்வரன் குரல்"**

*தலைவர், செயலாளர்,*
*கிராம அபிவிருத்திச் சங்கம்,*
*ஏழாலை மேற்கு.*

அதிகாரப் பரவலாக்கல் திட்டம் குறித்து

# தமிழ்க் கட்சிகளின் நிலை அறிவதில் வெளிநாட்டுத் தூதுவர்கள் நாட்டம்

கொழும்பு,ஜூலை10

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசினால் முன்வைக்கப்படவுள்ள அதிகாரப்பகிர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ள நிலையில் -

அதிகாரப் பகிர்வுத்திட்ட யோசனைகள் குறித்து தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவதில் வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆர்வங்காட்டி வருகின்றனர் என்று கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற நீதி, அரசமைப்பு, இன விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் நூல் வெளியீட்டு விழாவில் இந்த விடயம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோரை இலங்கைக்கான கனடா, பிரிட்டிஷ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் சந்தித்துப் பேசியதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கும் - ஐ.தே.கட்சிக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்கள் மற்றும் இணக்கப்பாடுகள் தமக்குத் திருப்தி தருவதாக அமையவில்லை எனத் தமிழ்க் கட்சியினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் அறிய வந்தது. (இ-7)

### சிரமதானம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத ஸ்ரீ கண்ணலிங்கேஸ்வரசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி தினசரி வட்டு இந்து இளைஞர் மன்றத்தின் தொண்டர் சபையினர் ஆலயத்தைச் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்து வருவதாக மன்றத்தின் தலைவர் ப.தேவகுமார் தெரிவித்தார். (இ-30)


உ
சிவமயம்

## உபநயன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வத்தி ஸ்ரீநிகழும் மங்களகரமான விக்கிரம வருடம், ஆனித்திங்கள் 28 ஆம் நாள் (12-07-2000) புதன்கிழமை காலை 8-15மணி முதல் 10-15 வரையுமுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்த வேளையில்

பிரம்மஸ்ரீ நா. ஷண்முகரெத்தினக்குருக்கள் அவர்களின்
ஆசியுடன்

பிரம்மஸ்ரீ சதாசிவக்குருக்கள்
பாக்கியலெட்சுமி அம்மா

பிரம்மஸ்ரீ கனகசபாபதி சர்மா
அன்னபூரணி அம்மா

தம்பதிகளின் பௌத்திரர்களும் எமது புத்திரர்களுமாகிய
**கஜானனன், சக்தீதரன்**

ஆகிய இருவருக்கும் உபநயனப் பிரம்மோபதேசம் செய்ய திருவருள் துணை கூடியுள்ளதால் அத்தருணம் தாங்கள் யாவரும் வந்து சிறப்பிக்கும்வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

*கல்வியங்காடு,*
*நல்லூர்.* (76306)

பிரம்மஸ்ரீ சதாபுவனேந்திரசர்மா (ரவி ஐயர்)
ஜெயராணி அம்மா தம்பதியினர்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 03 - 04 - 1948



உதிர்வு 11 - 06 - 2000

### திருமதி கந்தசாமி அன்னலெட்சுமி

திதி:- 10-07-2000

நயினைத் தாய் பெற்றெடுத்த நற்றமிழின் ஒளிவிளக்கே!
நாகம்மை வளர்த் தெடுத்த நல்லிதயப் பேரெழிலே!
உற்றாரின் இதயமதைப் பற்றாகப் பற்றி நின்றீர்!
உறவுகளை தவிக்க விட்டு ஏன் மறைந்தாய் எம் உயிரே!

வாரங்கள் சில கடந்தும் வற்றவில்லை உம் நினைவு
வசந்தங்கள் வந்தபோது பறித்து விட்டான் உம் உயிரை
காலங்கள் கடந்தாலும் கலையாது உம் நினைவு
கதறி மனம் துடிக்கிறது காத்து நிற்பார் யாரம்மா?

தலைவனை இழந்து நின்றும் தனித்து நின்று எமை வளர்த்தீர்
தாயன்பை ஊட்டி எமைத் தக்கவராய் வாழ வைத்தீர்
தன் உடன் பிறப்பு தனைத் தருணத்தில் காத்து நின்றீர்
தாயன்பை யாம் இழந்து இத் தாயகத்தில் வாழுவமோ?

அன்னையின் வடிவுடைய அழகொளிரும் அன்னலெட்சுமியே!
எண்ணத்தில் உயர்வுடனே ஏற்றமுடன் வாழ்ந்து நின்றீர்
கண்ணீரை வடித்து நின்றோம் காலனவன் பறித்து விட்டான்
கண்மணியின் தாரகையே கடவுள் பதம் சேர்வாய் அம்மா!
ஓம்... சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மலர் வளையங்கள் அர்ப்பணித்தோருக்கும், பத்திரிகை, கடிதம், தொலைபேசி வாயிலாக அஞ்சலி தெரிவித்தோருக்கும், பல்வேறு உதவிகள் புரிந்த உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,**
**மைத்துனர்கள், மைத்துனிகள்.**

*வட்டாரம்-5,*
*நயினாதீவு.* (76310)

வடக்கு - கிழக்கில்

# தேவை ஏற்படின் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்

கொழும்பு,ஜூலை10

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பிர[illegible]ங்களிலும் பொதுத்தேர்தலை நடத்த முடியாத நிலை காண[illegible]ல் அங்கு கொத்தணி முறையில் வாக்களிப்பு நிலையங்[illegible] நிறுவப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கு என 10ஆயிரம் வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும் எனவும் -

தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதும் தேர்தல் உடனடியாக நடத்தப்படும் என்றும் -

தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-7)

# வயோதிபர் நிலை குறித்து அறிய முடியாது தவிப்பு

கொழும்புத்துறை,ஜூலை10

இடப்பெயர்வின் போது கொழும்புத்துறை, அரியாலை கிழக்கு, மகேந்திரபுரம், துண்டி ஆகிய பகுதிகளில் இருந்து வெளியேறாத வயோதிபர்களின் நிலையை அறிய முடியாது அவர்களின் உறவினர்கள் தவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதிகளுக்கு தற்பொழுது செல்ல முடியாத நிலைமை இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதே நிலைமை தென்மராட்சியின் சில பகுதிகளிலும் ஏற்பட்டிருப்பதாக் தெரிவிக்கப்படுகிறது. (இ-30)

# தீவக வலய சித்திரக் கண்காட்சி

நெடுந்தீவு,ஜூலை10

தீவக கல்வி வலயம் நடத்தும் சித்திரக் கண்காட்சி எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் நா.க.சண்முகநாதபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

கடந்த மே மாதத்தில் நடைபெறுவதாக இருந்த இந்தக் கண்காட்சி யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைபெற முடியாமல் போய்விட்டதாகவும் -

அன்றைய தினம் கண்காட்சிக்குச் சமுகமளிக்குமாறு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டவர்கள் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிக்குச் சமுகந் தரும்படியும் -

காட்சி இரண்டு தினங்கள் நடைபெறவுள்ளதாகவும் - தீவக வலய அழகியற் கல்வித்துறைப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீஇராமச்சந்திரன் தெரிவித்தார். (இ-111)

### புனரமைப்புப் பணிகள்

நல்லூர்,ஜூலை10

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. (இ-30-103)


## இம்மாதம் 22ஆம் திகதி அதிர்ஷ்டசாலி யார்? (22-07-2000)


ரூபா1000 கொண்ட ரிக்கட் ஒன்றினைப்பெற்று சகல வசதிகளுடனும் கூடிய LANCER கார் ஒன்றின் உரிமையாளர் ஆகுங்கள்.
(மொத்தம் 350ரிக்கட்டுக்களே அச்சிடப்பெற்று விற்பனையாகின்றன)

ரிக்கட் பெற்றுக் கொள்ளும் இடங்கள்:

* ஐங்கரன் பிடவை மாளிகை
  பலாலி வீதி, கோண்டாவில்.
* ஓடியன் மியூசிக் சென்ரர்
  260, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
* விஷ்ணு அழகு மாடம்
  பஸ் தரிப்பிடம் எதிரே, சுன்னாகம்
* மெடிலான்ட் ஆங்கில மருந்தகம்
  சங்கானை

(76326)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



சிவத்திரு **கனக பாலசுப்பிரமணிய ஐயர்**
(பிரபல முத்துச் சப்பற அமைப்பாளர்,
அச்சுவேலி, பத்தமேனி, தீர்த்தாங்குளப்பதி)

திதி
(10-07-2000) திங்கட்கிழமை பூர்வபக்க தசமி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*தீர்த்தாங்குளப்பதி,*
*பத்தமேனி,*
*அச்சுவேலி* (76323)

# புதிய தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற தேர்தலின்பின் சர்வசன வாக்கெடுப்பு

கொழும்பு, ஜூலை 10

பொதுத்தேர்தல் முடிந்த கையோடு உத்தேசத்தீர்வுத் திட்டம் தொடர்பான சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது என்று அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் றொனி டிமெல்லுடன் சேர்ந்து பதினைந்துக்கும் அதிக ஐ.தே கட்சி எம்.பிக்கள் அரசுப்பக்கம் தாவத் தயாராக இருக்கின்றார்கள் என்றும் —

அவர்களின் உதவியுடன் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று அதன் மூலம் உத்தேசத்தீர்வு யோசனைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் வரை தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடிக்க அரசு முயலக்கூடும் என்று சில வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் — மற்றொரு ஆங்கில வாரஇதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (உ)

## குப்பை கொளுத்தியபோது மர்மப்பொருள் வெடித்தது!

### மாதகல் பகுதியில் சம்பவம்

சண்டிலிப்பாய், ஜூலை 10

மாதகல் பாணாவெட்டிப் பகுதியில் விவசாயி ஒருவர் தமது வயற்காணியிலுள்ள பற்றைகளை வெட்டி துப்புரவு செய்து குப்பையை தீவைத்துக் கொளுத்திய போது மர்மப்பொருள் ஒன்று பலத்த சத்தத்துடன் வெடித்தது.

இப்பகுதியில் முன்னர் போடப்பட்ட மண்அணைப் பகுதியில் உள்ள வயற் காணிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் இதனை அகற்றித் தருமாறு மாதகல் விவசாயிகள் சம்மேளனம், மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நேரிலும், கடிதமூலமும் வேண்டுகோள் விடுத்திருந்தன

இதேவேளை —

மாதகல் பாணாவெட்டி குளப்பகுதியிலும் பெரியவிளான் பகுதியிலும் மிதிவெடி அபாயம் பற்றிய எச்சரிக்கை அறிவித்தல்கள் புதிதாகப் போடப்பட்டுள்ளன. பண்டத்தரிப்பிலிருந்து பெரியவிளான் செல்லும் வீதியில் பெரியவிளான் சந்திக்கு சமீபமாக இது போன்ற எச்சரிக்கை அறிவித்தல்கள் அண்மையில் நடப்பட்டுள்ளன. (ஐ-135)

## கொடுப்பனவை பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனால் வழங்கப்படும் கல்வி நிவாரண உதவியைப் பெறும் யாழ். பல்கலைக் கழக மாணவர்களை மேற்படி கொடுப்பனவு சம்பந்தமாக எதிர்வரும் சனிக்கிழமை திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்துக்குச் சமுகம் தருமாறு அதன் இயக்குநர் இ. ராஜமகேந்திரசிங்கம் கேட்டுள்ளார். (இ-9)

## டிப்ளோமா பயிற்சி நெறி நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 10

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படும் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி) நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் பட்டதாரிச் சான்றிதழ், அதிபர் கடிதம், புகைப்படப் பிரதிகள் மற்றும் வேறு உறுதிப்படுத்தும் ஆவணம் ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கு. சண்முகநாதன் கேட்டுள்ளார். (இ-9)

## மண்எண்ணெய் விநியோகம்

சண்டிலிப்பாய், ஜூலை 10

மாதகல் விவசாய சம்மேளனத்தின் சிபார்சின் பேரில் மாதகலைச் சேர்ந்த 352 விவசாயிகளுக்கு வாரத்துக்கு 4 லீற்றர் மண்எண்ணெய் பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (இ-135)

## தென்மராட்சி கிழக்குக் கிராமங்களில் 3 ஆயிரத்து 172 குடும்பங்கள் இடம்பெயராமல் தங்கியுள்ளன.

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் 3 ஆயிரத்து 172 குடும்பங்கள் இடம்பெயராது தொடர்ந்து தங்கியிருப்பதாக யாழ். அரச அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம், விடத்தற்பளை, உசன், கச்சாய், கெற்பேலி, வரணி, மிருசுவில் படித்த மகளிர் திட்டம் ஆகிய கிராமங்களிலே மக்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் வரணி ம.வி. விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம், குடமியன் ஜீ.ரி.எம் எஸ். கரம்பைக்குறிச்சி அமெரிக்க மிஷன் பாடசாலை, இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாலயம், வரணி சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகள் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொடிகாமத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான போக்குவரத்துச் சேவையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை —

இன்று திங்கட்கிழமை தொடக்கம் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு இராமகிருஷ்ணாலயம் உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 10

போர் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து திருநெல்வேலியில் மகாத்மாஜி சனசமூக நிலையம், இந்து தமிழ் கலவன் பாடசாலை மற்றும் முத்துத்தம்பி பாடசாலை ஆகியவற்றில் அகதிகளாகத் தொடர்ந்தும் தங்கியுள்ள மக்களுக்கு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் கொழும்பு இராமகிருஷ்ண மிசன் உதவியுடன் நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அதன் இயக்குநர் தெரிவித்தார்

கல்வி கற்கும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் அன்றையதினம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## அகதி முகாம்களில் உள்ள குழந்தைகளுக்குத் தொற்றுநோய்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இடம்பெயர்ந்த மக்கள் வாழும் அகதி முகாம்களில் நெருப்புக்காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவ ஆரம்பித்துள்ளன.

வயிற்றோட்டம் அதிகமாக சிறுவர்கள் மற்றும் குழந்தைகளையே தொற்ற ஆரம்பித்துள்ளது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட இரண்டு குழந்தைகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் பாடசாலை அகதிமுகாமைச் சேர்ந்த இராசேந்திரம் கணேஷ் (ஒன்றரை வயது) சுழிபுரம் பாணாவெட்டி ஐ டி.பி. முகாமைச் சேர்ந்த தங்கேஸ்வரன் சஞ்சீபன் (ஒருவயது) ஆகிய சிறுவர்களே வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்பட்டவர்களாவர்.

மேலும் பலர் இந்தநோயின் பாதிப்புக்குள்ளாகும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-15)

## துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளானவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கடந்த 5 ஆம் திகதி துப்பாக்கிச்சூட்டுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு நான்கு நாள்களின் பின் நேற்று அங்கு மரணமானார்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் பாடசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் இராசசிங்கம் வீதியைச் சேர்ந்த மைக்கல் கஜேந்திரன் நிஷாந்தன் (வயது 16) என்பவரே மரணமானவராவார்.

அப்பாடசாலையில் அகதியாகத் தங்கி இருந்த இவர் அங்கே உள்ள ஏனைய சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த சமயமே எங்கிருந்தோ வந்த துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15-5)

## கடந்த மாதம் 5,94,000 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம்

கடந்த மாதத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 5 லட்சத்து 94 ஆயிரம் லீற்றர் மண் எண்ணெய் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

டீசல் 2 லட்சத்து 24 ஆயிரம் லீற்றரும் பெற்றோல் ஒருலட்சத்து ஆயிரம் லீற்றரும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-5)

## நெடுந்தீவுக்கான மின்சார விநியோகம் விரிவுபடுத்தப்படும்

நெடுந்தீவுப் பகுதிக்கான மின்சார விநியோகத்தை விரிவுபடுத்த மின்சாரசபை 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

பின் தங்கிய நிலையில் உள்ள கிராமங்களுக்கு மின்சார வசதிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த நிதியை மின்சாரசபை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதேவேளை நெடுந்தீவுப் பகுதிக்கான மின் விநியோகத்துக்கென கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட மின் பிறப்பாக்கி மின்சார சபையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் —

இதனை மீட்டுத் தருமாறு நெடுந்தீவு பிரதேச சபையினர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## தேர்தல் நடத்த ரூ. 50 கோடி

கொழும்பு, ஜூலை 10

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு 50 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் அடுத்தமாதம் 24 ஆம் திகதி பூர்த்தியாகும் அதன் பின்னர் எந்த நேரத்திலும் தேர்தலை நடத்தத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## இடம்பெயர்ந்தோரில் பலர் மீளக்குடியமர்கின்றனர்

வலி. வடக்கு, ஜூலை 10

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற குடும்பங்களில் பல தமது பழைய இடங்களில் மீளக்குடியமரத் தொடங்கின.

கடந்த இரண்டு மாதங்களாக இப் பகுதிகளில் காணப்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்களே மீளவும் தமது இருப்பிடங்களுக்கு வரத்தொடங்கியுள்ளனர்.

கச்சேரியடி, மருதடி, கொன்வென்ற், இராசாவின் தோட்டம், ஈச்சமோட்டைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களில் பலரும் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவிலும் நல்லூர் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களிலும் ஒரு பகுதியினர் மீளக்குடியமர்ந்துள்ளனர். (இ-86)

## குருநகரில் தங்கியுள்ளோர் மட்டுமே மீன் பிடிக்க அனுமதி!

### இடம் பெயர்ந்து வசிப்போர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

குடாக் கடலில் தொழிலில் ஈடுபட நேற்று முன்தினம் முதல் மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் குருநகர் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மீனவர்களில் மீண்டும் அங்குவந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கே மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

அண்மைக்கால அசம்பாவிதங்களைத் தொடர்ந்து குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேறி இருந்தனர். இவர்களில் குருநகர் பகுதியில்மீளக்குடியமர்ந்த சில குடும்பங்களே மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீன் பிடி அனுமதி வழங்கப்பட்டதைக் கேள்வியுற்ற மீளக் குடியமராத குடும்பங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சிலரும் கடற்றொழிலுக்காக சென்றிருந்த போதும் அவர்கள் கடலுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை—

கடந்த வாரம் குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் சிறகுவலைச் சங்கம் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது குருநகர் பகுதியில் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள் என்பதை அப்பகுதி கிராம சேவையாளர்கள் ஊடாக உறுதிப்படுத்தும் குடும்பங்களே கடற்றொழிலுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டதாக சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதேசமயம் —

நேற்று முன்தினம் முதல் பிடிக்கப்படும் மீன் வகைகளை விற்பனை செய்வதற்கு கொட்டடிச் சந்தைக்கே மீனவர்கள் எடுத்துச் சென்றதாகவும் —

சின்னக்கடைச் சந்தை இயங்காததாலேயே இந் நிலை ஏற்பட்டது என்றும்— கூறப்பட்டது. (ஐ-9.51)

## சைக்கிள் உரிமத் தகடு

நெல்லியடி, ஜூலை 10

பருத்தித்துறை பிரதேச சபையின் தலைமைப் பணிமனையில் வைத்துச் சைக்கிள்களுக்குரிய இவ்வருட இலக்கத்தகடு விநியோகிக்கப்பட்டுவருகின்றது.

சைக்கிள் பாவனையாளர்கள் 5 ரூபா செலுத்தி இதனைப் பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-109)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சந்திரகாந்தன் கணநாதன் என்பவருடைய விசேட அ.அ திருநெல்வேலி சந்தியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 41/73, செட்டியார் தோட்டம், முத்திரைச்சந்தி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன். (76321)

கொட்டடி. இல 01, சினிவாசன் வீதியைச் சேர்ந்த குணரத்தினம் சிவசதீசன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விஷேட அடையாள அட்டை என்பன 07-07-2000 அன்று வட்டுக்கோட்டைக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சரஸ்வதி விலாஸ் 195 (57), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் (76319)

குளங்கரை வீதி,கோண்டாவில் எனும் முகவரியைச் சேர்ந்த தவராஜசிங்கம் தினேஷ்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல- 811983101V), விசேட அ. அ (இல- 0902039392) என்பனவும் சிறு தொகைப் பணமும் கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கும் மேற்கூறிய முகவரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் அல்லது கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு எதிரேயுள்ள கடையில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (76328)

### உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் பாவித்துக்கொண்டிருக்கும் 1ஸ்ரீ தொடர் இலக்கமுடைய மொறிஸ் மைனர் 1000 வைக்கன் மொடல் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்லிகா கூழாவடி தபால் கந்தோருக்கு அருகில், ஆனைக்கோட்டை. (76305)

### மாணவருக்கு அழைப்பு

வலிகாமம் பகுதிகளில் தங்கி உள்ள பளை மத்திய கல்லூரியின் ஜி. சீ. ஈ சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்களைபரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தில் கையொப்ப மிடுவதற்காக மருதனார் மடத்தில் உள்ள வலயக் கல்விப் பணிமனைக்கு எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு வருமாறு அதிபர் கே. குணபாலசிங்கம் கேட்டுள்ளார். (இ-9)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை, கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(76292)

## தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோரின் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதக் கொடுப்பனவு

2000 ஆம் ஆண்டு ஜூலை மாதக் கொடுப்பனவு கீழ்க் குறிப்பிடப்படும் வங்கிகளினால் வழங்கப்படும். ஓய்வூதிய வவுச்சர்கள் கீழ் குறிப்பிடப்படும் வங்கிகளில் வைத்து எனது செயலக உத்தியோகத்தர்களினால் 12—07—2000 தொடக்கம் 21—07—2000 வரை வழங்கப்படும். இதற்குப் பின் வவுச்சர் பெறுவோர் கோப்பாய் பிரதேச செயலகத்தில் இயங்கும் ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியர்கள் தங்களது வவுச்சர்களைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது ஓய்வூதிய அடையாள அட்டை, வங்கிச் சேமிப்புப் புத்தகம், ஓய்வூதியக் கொடைப்பத்திரம், முன்னைய மாதங்களின் ஓய்வூதியப் பற்றுச் சீட்டின் பிரதி இவைகளில் ஆகக் குறைந்தது ஒன்றையாவது சமர்ப்பித்தல் வேண்டும்.

1. இலங்கை வங்கி சாவகச்சேரி -
   இலங்கை வங்கி பருத்தித்துறை,
   இலங்கை வங்கி மானிப்பாய்.

இலங்கை வங்கி மானிப்பாயில் ஓய்வூதியம் பெறுவோர் 17—07—2000, 18—07—2000 திகதிகளில் மட்டுமே கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் இலங்கை வங்கி பருத்தித்துறையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி -
   தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம்,
   தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்.

தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணத்தில் ஓய்வூதியம் பெறுவோர் புதன்கிழமைகளிலும் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர் புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

3. மக்கள் வங்கி சாவகச்சேரி -
   மக்கள் வங்கி கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்,
   மக்கள் வங்கி நெல்லியடி.
4. கிராமிய வங்கி கைதடி -
   இணுவில் ஆஸ்பத்திரிக்கு அண்மையிலும் உள்ள கிராமிய வங்கி கைதடி
5. கிராமிய வங்கி சாவகச்சேரி -
   நெல்லியடி பேருந்துசாலைக்கு அண்மையிலுள்ள கிராமிய வங்கி சாவகச்சேரி.
6. கிராமிய வங்கி கொடிகாமம் -
   கிராமிய வங்கி கொடிகாமம்.

பு. சுந்தரம்பிள்ளை
பிரதேச செயலர்
தென்மராட்சி, சாவகச்சேரி.

(76325)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் வேலன் வைத்தி

தோற்றம் 01-07-1917 — மறைவு 10-06-2000

சங்கானையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் வைத்தி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு சகலவழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், அயலவர் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று [10—07—2000] திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திக்கிரியைகளில் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

கராச் லேன்,
சண்டிலிப்பாய். (76281)

## போதைப் பொருள் தடுப்புப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வலிகாமம்தெற்கு,ஜூலை10 போதைப் பொருள் தடுப்புக் கல்வி பற்றி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட நாடளாவிய போட்டித் தொடரில் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, சிறுகதை, சுவரொட்டிச்சித்திரம் போன்ற போட்டிகளில் முதல் மூன்றிடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:

### கனிஷ்ட பிரிவு

பேச்சு: தே. வெண்ணிலா (உடுவில் மகளிர் கல்லூரி) வே. தர்ஜினி (சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தி.) ச. சுகன்யா (விக்டோரியா கல்லூரி)

கட்டுரை: கி. விக்கினேஸ்வரி (மானிப்பாய் மெமோறியல்) ப. விபுலாஜினி (சுதுமலை சிந்மயபாரதி) சி. மயூரஜீவா (சங்கானை சிவப்பிரகாச வித்தி)

### சிரேஷ்ட பிரிவு

பேச்சு: த. ஸ்ரீபிரகாஸ் (யூனியன் கல்லூரி) போ. சித்திரா (சுதுமலை சிந்மய பாரதி) யாழினி (சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தி)

சிறுகதை: த. பிரபாகரன் விக்டோரியா கல்லூரி) சி. (விஜிதா (சுதுமலை சிந்மய பாரதி) சி. ஆரபி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

சுவரொட்டிச்சித்திரம்:
பா. சுரேஸ்கன்னா (இணுவில் மத்தியகல்லூரி) சி. தினேஸ்குமார் (விக்டோரியா கல்லூரி) வி. டர்மினி (மானிப்பாய்மகளிர் கல்லூரி)
(ஐ - 152)

## பல்கலைக்கழக கலைப்பீட இறுதி வருட 'A' பிரிவு மாணவர்களுக்கான அறிவித்தல்

எமது பிரிவுபசார வைபவம் மதிய போசனத்துடன் இன்று (10-07-2000)திங்கள் 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. அனைத்து இறுதி வருட 'A' பிரிவு கலைப்பீட மாணவர்களும் மாணவர் பொது அறையில் தவறாது கலந்து கொள்ளவும்.

நன்றி.

இறுதி வருட 'A' பிரிவு பிரதிநிதி
(76327)

## கரம்பொன் புனித செப்ஸ்தியார்ஆலய வருடாந்தப் பெருவிழா

மேற்படி ஆலய வருடாந்தப் பெருவிழா புதன்கிழமை 12-07-2000 மாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16-07-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் நிறைவடையும். பங்கு மக்கள் அனைவரையும் இந்த விழாவில் பங்கு பற்றி செபஸ்தியாரின் அருளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும்,
பங்குச் சபையினரும் மக்களும்
(79231)

## இடம் மாற்ற அறிவித்தல்

### 'ஈசன்ஸ்' அந்திய கால சேவை

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு, பிரதான வீதியில் இயங்கிவந்த 'ஈசன்ஸ்' அந்திய கால சேவை கிளை நிறுவனம் தற்காலிகமாக மானிப்பாய், பிரதான வீதி, சுதுமலைச் சந்திக்கு அருகில் இயங்கி வருகிறதென்பதையும் எமது தலைமை நிறுவனம் தொடர்ந்தும் இல. 148, பிரதான வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் இயங்கி வருகிறதென்பதையும் எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நிர்வாகத்தினர்

(76317)

## வாகன உரிமையாளருக்கு ஒரு நற்செய்தி!

பலாலி றோட், கோண்டாவில் சந்திக்கு அண்மையில் உள்ள ஸ்ரீகாந்தா சேவிஸ் ஸ்ரேசன் சென்ற 28-06-2000 இலிருந்து வெகு சிறப்பான முறையில் மீண்டும் இயங்கி வருகின்றது என்பதை மிக மகிழ்ச்சியுடன் வாகன உரிமையாளருக்கு அறியத்தருகின்றோம். உங்கள் ஆதரவுக்கு நன்றி.

உரிமையாளர்,
ந. ஸ்ரீகாந்தா,
ந. நவரத்தினராசா.

கோண்டாவில். (76314)

## உதயன்

### சாதனையின் விளைவு எது?

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப்பரவல் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கக் கட்சியும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இணக்கம் காணப்பட்ட அதிகாரப்பரவல் திட்டம், என்னென்ன அம்சங்களைக் கொண்டுள்ளன என்ற விவரம் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. ஏன், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்களுக்கே அது பற்றிய விவரம் எதுவும் தெரியாது.

இத்தகைய பின்னணியில், ஒற்றையாட்சிக்கு பதிலாகப் பிராந்தியங்களின் ஒன்றியத்தை உருவாக்கும் யோசனைக்கு எதிர்க் கட்சி இணக்கம் தெரிவித்துவிட்டதாக அரசாங்கத் தரப்பு ஊடகங்கள் சாற்றுகின்றன. ஆனால் தாம் அந்த அம்சத்துக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என்று எதிர்க் கட்சி வட்டாரங்கள் உத்தியோகப்பற்றற்ற முறையில் கூறியுள்ளன.

அதிகாரப் பகிர்வின் முக்கிய அம்சம் குறித்தே இரு வேறு விதமான தகவல்கள் வெளியானால், தீர்வுத் திட்டம் முழு அளவிலான கருத்தொற்றுமையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நம்ப மனம் ஒப்பவில்லை. தீர்வுத் திட்டம் குறித்து தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளும் கருத்திணக்கம் கண்டுள்ளன என்று எடுத்துக்கொண்டால், அது உண்மையிலேயே இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு சாதனைதான்! நிச்சயமாக சந்திரிகாவும், ரணில் விக்கிரமசிங்கவும் தாம் வரலாறு படைத்துவிட்டதாகப் பெருமிதம் கொள்ளலாம்.

கட்சி வேறுபாடுகளை மறந்து, அரசியல் லாபம் கருதும் வழமையான குணாம்சத்தைக் களைந்து, நாட்டு நலன்கருதி இரு தலைவர்களும் இணக்கத்துக்கு வந்துள்ளார்கள் என்றால் அது பாராட்டப்படவேண்டியதே. தமிழர்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்க்காமல், அவற்றை முன்வைத்தே தமது வாக்கு வங்கிகளைப் பெருக்கிய இந்தக் கட்சிகள் இப்போது தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு கருத்திணக்கம் கண்டிருப்பது மிகப் பெரியமாற்றமே. மறுப்பதற்கில்லை.

இந்த மாற்றம் உண்மையாயின் ஜனாதிபதி சந்திரிகா பெருமிதப்பட்டிருப்பது போல நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க இந்த நடவடிக்கை வழி வகுக்கும் என்பது சரியே. ஆனால் பெரும் 'வரலாற்றை' உருவாக்கி இணக்கம் காணப்பட்டுள்ள தீர்வு, தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுகிறதா, அவர்களுக்குரிய பிறப்புரிமைகளை - சேரவேண்டிய, நியாயமான உரிமைகளை - வழங்குகிறதா என்பதே முதலில் நோக்கப்பட வேண்டியதாகும்.

கடந்த பல தசாப்தங்களாக காணப்படாத, கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நாட்டு நலனை முன்வைத்துப் பணியாற்றும் பண்பு பிறந்திருப்பது வரவேற்கத்தக்கதாயினும் அதன் விளைவான தீர்வுத்திட்டம், தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத அரைவேக்காட்டுச் சரக்காக இருப்பின் 'சாதனையும்', 'வரலாறும்' வெற்றுப் பிரலாபங்கள் ஆகிவிடும்!

மொத்தத்தில் இந்தச் 'சாதனை', இதோ பெரும் அற்புதம் பார்த்தீர்களா என்று சர்வதேச உலகத்துக்குக் காட்டவும், அதன் மூலம் நிதி உதவும் நாடுகள், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றின் மனங்களைக் குளிரச் செய்து பணம் பெறுவதற்கான ஒரு முயற்சியாகவே முடியும்! சந்திரிகாவும் ரணில் விக்கிரமசிங்கவும் கையொப்பமிட்டுவிட்டதாகக் கூறப்படும் தீர்வு யோசனை மக்கள் அறியப் பகிரங்கப்படுத்தப்படும் போது வண்டவாளங்கள் தெரிய வந்துவிடும்!

# குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்க றொனிக்கு இன்றுவரை அவகாசம்

## நடவடிக்கை எடுப்பதற்கு குழு ஒன்று அமைக்கப்படும்

நாடாளுமன்றில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதத்தின்போது கட்சியின் கொள்கைக்கு எதிராகச் செயற்பட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் றொனி டி மெல்லிடம் ஐக்கிய தேசியக் கட்சி விளக்கம் கோரியுள்ளது.

இன்று திங்கட்கிழமைக்குள் அவர் அந்த விளக்கத்துக்கு பதிலளிக்கத் தவறினால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.தே. கட்சி செயலாளர் டாக்டர் காமினி அத்துக்கோறள தெரிவித்தார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீது றொனி டி மெல் உரை நிகழ்த்துகையில் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிப்போர் தேசத்துரோகிகள் என்று தெரிவித்திருந்தது தெரிந்ததே.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி வாக்களித்து வருவதால் றொனி டி மெல்லின் உரை கட்சிக்கு எதிரான போர்க்கொடியாகக் கருதப்படுகிறது.

றொனி டி மெல் இன்று திங்கட்கிழமை உரிய விளக்கம் அளிக்கத் தவறும் பட்சத்தில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் -

அந்தக் குழு விசாரணை அறிக்கையை கட்சியின் நிறைவேற்றுக் குழுவுக்குச் சமர்ப்பித்ததும் றொனி டி மெல்லுக்கு எதிராகக் கட்சி நடவடிக்கை எடுக்குமென்றும் டாக்டர் காமினி அத்துக் கோறள மேலும் தெரிவித்தார். (இ-9)

# தமக்கு 10 ஐ.தே.கட்சி எம்.பிக்களின் ஆதரவு உண்டு என்கிறார் றொனி

கொழும்பு,ஜுலை10

பத்து ஐ.தே. கட்சி எம்.பிக்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கத் தயாராகவிருப்பதாக ஐ.தே.கவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ள றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

இதனால் அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்ற முடியும் என்றும் றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியிடம் உருப்படியான திட்டம் எதுவும் கிடையாது என்றும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே மீண்டும் வெற்றிபெறப் போகிறது என்றும் றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் லண்டன் புறப்பட்டுச் சென்ற றொனி டி மெல் இரண்டு வாரங்கள் லண்டனில் தங்கியிருப்பார் என்றும் அவர் இலங்கை திரும்பிய பின்னரே தமது அடுத்த நடவடிக்கையை அறிவிப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-9)

# 2,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் விசாரணை இன்றி தடுத்துவைப்பு

கொழும்பு,ஜுலை10

வெலிக்கடை, களுத்துறை ஆகிய சிறைச்சாலைகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் விசாரணைகள் எதுவுமின்றி நீண்ட நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட இவர்கள் தொடர்பாக இதுவரையும் நீதிமன்றத்தில் வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 500 தமிழ்ப் பெண்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# மோசமான நிலையில் குறிகாட்டுவான் வீதி

குடாநாட்டுக்கும் தீவுப்பகுதிகளுக்கும் இடையில் முக்கிய போக்குவரத்துப் பாதையாக விளங்கும் புங்குடுதீவு-குறிகாட்டுவான் பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகிறது.

இதனை விரைவில் திருத்தி அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த உற்சவ காலத்துக்கு முன்னர் குறிப்பிட்ட வீதி திருத்தியமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் மேற்படி வீதியின் பெரும் பகுதி இன்னமும் திருத்தப்படாமலேயே உள்ளது.

இதனால் இப்பாதையில் செல்லும் பஸ்களும் பாரவூர்திகளும் அடிக்கடி பழுதடைகின்றன. நெடுந்தீவு, நயினாதீவு போன்ற தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியும் உள்ளது. (இ-111)

# இடம்பெயர்ந்த மாணவருக்கு பிரதேச சபை உபகரணங்கள்

வலி.கிழக்கு,ஜுலை10

இடம்பெயர்ந்து வலி.கிழக்குப் பகுதியில் வசித்துவரும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்க வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சபை நிதி மூலம் 5 லட்சம் ரூபா செலவில் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களான கொப்பி வகைகள், உடைகள், சத்துணவுகள் போன்றவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதனை வழங்க வடக்கு - கிழக்கு ஆளுநரிடம் சபை அனுமதி கோரியுள்ளது எனவும் - அனுமதி கிடைத்தவுடன் இவற்றை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும்- பிரதேச சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பிரதேச சபை இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு ஒரு தொகுதி சத்துணவுகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார். (இ-180)

### நிரந்தர நியமனம் இன்னும் இல்லை

சிறுகைத்தொழில், தொழில் திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் சுமார் 34 நெசவு போதனாசிரியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்றும் - இவர்கள் கடந்த மூன்று வருடங்களாக தற்காலிகமாகப் பணிபுரிந்து வருகின்றனர் என்றும் தெரிய வருகிறது. (இ-109)

### மத்திய மருந்தகக் கட்டடம்

சுமார் எட்டரை லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட கரவெட்டி மத்திய மருந்தகக் கட்டடம் இம்மாத இறுதியில திறந்து வைக்கப்படவிருப்பதாக வைத்தியசாலை அபிவிருத்திச சபைத் தலைவர் ச.செவ்வந்திநாதர் தெரிவித்தார். (இ-109)

### பாடசாலை பெயர் மாற்றம்

நெடுந்தீவு,ஜுலை10

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் மகாவித்தியாலயம் "நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு மேற்படி பெயர் மாற்றம் தொடர்பான கடிதங்களை வலயக் கல்வி அலுவலகத்துக்கும் (தீவகம்), கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோவுக்கும் அனுப்பிவைத்துள்ளது. (இ-7-111)

### இராஜகோபுரம்

பண்ணாகம் விஸ்வத்தனை அருள்மிகு ஸ்ரீமுருகமூர்த்தி கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் அமைக்கும் பணிக்கு கடந்த மாதம் அடிக்கல் நடப்பட்டது. (இ-30)

# கண் பரிசோதனை முகாம்

வலி.கிழக்கு,ஜுலை10

இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்று சமீபத்தில் மானிப்பாய் வட்டம், கொக்குவில் வட்டம் ஆகிய லயன் கழகங்களால் இராமகிருஷ்ண முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டது.

200 முதியோர்கள் அன்றையதினம் கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 25 பேர் கண் வெண்விழிப்படல சத்திர சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை வசதிகுறைந்த 19 வயோதிபர்களுக்கு கொழும்பு கிராண்ட்பாஸ் லயன் கழகத்தைச் சேர்ந்த லயன் டபிள்யூ. இராஜசிங்கத்தினால் இலவசமாக கண்ணாடி வில்லைகள் வழங்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் கண் பரிசோதனைகளை நடத்தி ஆலோசனைகளையும் வழங்கினார்.

இதேவேளை, இந்த சிகிச்சை முகாமுக்கு அன்றைய தினம் ஏராளமானோர் வந்த போதிலும் 200 பேரே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஏனையோருக்கு மிக விரைவில் பரிசோதனைகள் நடத்தப்படவிருப்பதாக லயன்கழக மாவட்ட சேவை இணைப்பாளர் எஸ்.தங்கராசா தெரிவித்தார். (இ-180)

# இடம்பெயர்ந்தோருக்கு மற்றொரு சங்கக் கிளை

நெல்லியடி,ஜுலை10

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், இடம்பெயர்ந்த மக்களின் நலன்கருதி வடமராட்சிப் பகுதியில் மேலும் ஒரு சங்கக் கிளையை கடந்த சனிக்கிழமை திறந்துவைத்தது.

இப்புதிய கிளை தும்பளைப் பகுதியில் உள்ள ஒரு கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கற்கோவளம் மெ.மி.பாடசாலை அதிபர் எஸ்.தங்கராஜா மங்கள விளக்கேற்ற மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர் எஸ்.சுப்பிரமணியம் கிளையைத் திறந்து வைத்தார்.

இதேவேளை இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஏற்கனவே நெல்லியடி, கரவெட்டி கிழக்கு, மந்திகை, சித்தன் கேணி, மாகியப்பிட்டி, சுன்னாகம், உடுவில், உடுப்பிட்டி ஆகிய எட்டு இடங்களில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (இ-109)

# வேலணைப்பகுதியில் ரூ.30 லட்சம் செலவில் அபிவிருத்தி வேலைகள்

வேலணை,ஜுலை10

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபையினால் சுமார் 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

இந்த நிதியிலிருந்து பின்வரும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவை வருமாறு:-

வேலணைப் பிரதேச சபை வளாகத்திலுள்ள திறந்த வெளி அரங்கு புனரமைப்பு, வேலணை நீர்விநியோக வீதி புனரமைப்பு, வேலணை அம்மன் வீதி புனரமைப்பு, வேலணை வைரவர் வீதி புனரமைப்பு, வேலணை ஐக்கிய உதயமால் சனசமூக நிலையம் அமைத்தல், வேலணை சிற்பனை வீதி புனரமைப்பு, வேலணை நாச்சிமார் பொதுக் கிணறு திருத்தம், வேலணை சிறிமுருகன் சனசமூக நிலையத்திற்கு தளபாடம் வழங்கல், வேலணை சாட்டி மாதா ஆலயச் சூழலில் மலசலகூடம் அமைத்தல், வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகப் பணிமனை புனரமைப்பு, புங்குடுதீவுப் பகுதியில் சுடலை மடம் அமைத்தல், சித்தி விநாயகர் சனசமூக நிலையம் புனரமைப்பு, நயினாதீவுப்பகுதியில் சுடலை மடம் அமைத்தல், நயினாதீவு யாத்திரீகர்மடம் புனரமைப்பு, நயினாதீவு ஆலம்புல வீதி புனரமைப்பு, நயினாதீவு தீர்த்தக்கரை அந்தியேட்டி மடம் புனரமைப்பு, அல்லைப்பிட்டி வீதி புனரமைப்பு, நூல்கள் வழங்கல், புங்குடுதீவு தசரெத் சனசமூக நிலைய புனரமைப்பு மிகுதி வேலை. (இ-167)

### நாளை

ஆனி 27

செவ்வாய்க்கிழமை

*திதி:* தசமி

நண்பகல் 11.59 வரை

*நட்சத்திரம்:* விசாகம்

பின் இரவு 3.34 வரை

*சுபநேரம்:* 10.29 - 11.59

*ராகுகாலம்:* 2.59 - 4.29

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தியாகத்தால் உலக சாந்தி உயரும். சக்திப் பெருக்கால் போரே வளரும். பேராசையை அடக்கிக் கருணையை வளர்த்தால், எங்கும் சாந்தி நிலவும்.

- *கவி தாகூர்*

### பாலர் பாடசாலை

கொழும்புத்துறை,ஜுலை10

சுண்டுக்குளி பரியோவான் ஆலயத்தின் பாலர் பாடசாலை வழமை போன்று அங்கு தற்போது இயங்கி வருகின்றது. (இ-30)

# தப்பியோடிய படையினர் இரண்டாயிரம் பேர் கைது!

## தேடுதல் நாடெங்கும் தொடரும்

கொழும்பு,ஜூலை10

நாடு முழுவதும் நடத்தப்பட்ட தேடுதலின்போது இராணுவத்திலிருந்து தப்பியோடிய இரண்டாயிரம் பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, காலி அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் இவர்களில் பெரும்பாலானோர் கைதுசெய்யப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தப்பியோடிய படையினர் அனைவரும் கைதுசெய்யப்படும் வரை தேடுதல் நடவடிக்கை தொடரும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் நேர்முகப்பரீட்சையின் போது சமுகமளித்த பலர் அதற்குத் தேவையான தகுதியைக் கொண்டிருந்த போதிலும் அவற்றுக்கான சான்றிதழ்களை சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாகவும் -

நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது உரிய சான்றிதழ்களை தவறாமல் எடுத்து வரவேண்டும் என்றும் -

இராணுவத் தகவல் பிரிவை மேற்கோள் காட்டி விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது

(ஐ-4-7)

## இலங்கை அணி வென்றது

கொழும்பு,ஜூலை10

சிங்கர் கிண்ணத்துக்கான முத்தரப்பு ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடரில் நேற்று கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஐம்பது ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்டத்தின் நிறைவில் இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரியா ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். இந்தத் தொடரின் நான்காவது ஆட்டம் நாளை இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கண்டியில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

## முறைப்பாடு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்மேற்கு (சண்டிலிப்பாய்) ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக 51ஆவது படையணியின் அதிகாரி மேஜர் ஜெனரல் ஜி.டபிள்யூ. ஜயசுந்தரவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

021-2259 அல்லது 021-3041 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்பு கொண்டு முறைப்பாட்டைத் தெரிவிக்கலாம் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## புதனன்று......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கே வழிவகுக்கும் என்றும்-

அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைஉயர்வு பொது மக்களைப் பல்வேறு வகையில் பாதித்துள்ளதாகவும் -

ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

(ஐ-7)

## வெளிநாட்டு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்க முடியும் என்றும் அவை சுட்டிக்காட்டியிருந்தன.

இத்தகைய பின்னணியில் இலங்கை அரசியலில் ஒரு திருப்பமாக அமைந்துள்ள அரசு - எதிர்க்கட்சி இணக்கத்துடன் உருவாகியுள்ள தீர்வுத் திட்டத்தை விரைவில் விளக்குவதால் பல சாதகமான விளைவுகள் உண்டாகும் என்று அரசதரப்புக் கருதுகிறதாம்.

ஆகையால் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பை இயன்றளவு விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அரசுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

தீர்வுத் திட்டம் குறித்து தமிழ்க்கட்சிகளுடன் இவ் வாரத்தில் ஆராய்ந்த கையோடு, வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பு நடைபெறலாம் என்றும் -

இச்சந்திப்புக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமை வகிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(அ-3)


### மேவின் தையல் நிலையம்

**வாடிக்கையாளர்களே!**

இல.92, யாழ்வீதியில் இயங்கி வந்த மேவின் தையல் நிலையம் அனைவரின் நன்மைகள் கருதி இல.28, நவீனசந்தை, மேல்மாடி (யாழ். வர்த்தக சங்கத்திற்கு அருகில்), 10-07-2000 திங்கட்கிழமை முதல் உங்கள் தேவைக்காய் சேவையாற்ற ஆரம்பமாகின்றது, என்பதனை அனைவருக்கும் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**அன்றும்!**

**இன்றும்!**

**என்றும்!** *உங்களை அலங்கரிக்கும் ஒரு நிறுவனம் மேவின் தையல் நிலையம். ஆண்களுக்கான சகல விதமான ஆடைகளைச் சிறந்த முறையில் நவீன உலகிற்கு ஏற்றவகையில் தைத்து வழங்குபவர்கள்.*

மேவின் தையல் நிலையம்.

உரிமையாளர்
**அ.மேவின்.**

(76303)


## பிஜி நெருக்கடி தீரும் அறிகுறி

சுவா,ஜூலை10

பிஜியில் இரண்டுமாத காலமாகத் தொடரும் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பது தொடர்பான புதிய ஒப்பந்தம் ஒன்றில் இராணுவ ஆட்சியாளர்களும் கிளர்ச்சிக்காரர்களும் கைச்சாத்திட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் படி நாடாளுமன்றக் கட்டடத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்திரி உட்பட27 பேரும் எதிர்வரும் வியாழக்கிழமை விடுவிக்கப்படவுள்ளனர். அதேவேளை கிளர்ச்சிக்காரர்களுக்கு பொது மன்னிப்பும் வழங்கப்படவுள்ளது. (ஐ-4)

# தமிழ்க் குழு உறுப்பினர் காயம்

கொழும்பு,ஜூலை10

மன்னார் நகரப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் ஒன்றில் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் சுரேஸ் அணியைச் சேர்ந்த றொனால்ட் என்பவர் தலையில் காயமடைந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் வரதர் அணியைச் சேர்ந்தோரே துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

(ஐ-7)

## நேர்முகப் பரீட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்முகப்பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்தி விவரங்களை அனுப்புமாறு வலயப் பணிப்பாளர்களை தாம் கேட்க இருப்பதாகவும் -

அந்த விவரங்களின் அடிப்படையில் நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் - அவர் மேலும் சொன்னார்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் இன்னும் ஒரு வாரத்தில் 400 பேருக்கு நியமனம் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

(ஐ-3)


# மூன்றாம் ஆண்டு நிறைவும் ஆத்ம சாந்தி நிகழ்வும்

அன்னை மடியில் 20 - 11 - 1946



அம்மன் திருப்பாதத்தில் 14 - 07 - 1997

## திருமதி சிவலிங்கம் இராசகுமாரியம்மா

(இராசாத்தி, அண்ணி)
(ஓ பெற்ற நெசவுப் போதனாசிரியர்)

அம்மா உன் பிரிவுத்துயர்
வினாடிகள் நிமிடங்களாகி,
நிமிடங்கள் மணிகளாகி,
மணிகள் நாள்களாகி,
நாள்கள் வாரங்களாகி,
வாரங்கள் மாதங்களாகி,
மாதங்கள் வருடங்களாகி,

**இன்று மூன்றாம் ஆண்டு நிறைவு நாளாகி விட்டது அம்மா!**
**வினாடிகள் கூடி மேலும் ஆண்டுகள் பல கடந்தாலும் உன் பிரிவுத்துயர்**
**உனது அன்பு உள்ளங்களில் என்றும் நீங்காது அம்மா.**

14.07.97அன்று வன்னியில் சிவபதமெய்திய எமது அன்புத் தெய்வம் குடும்பக் குலவிளக்கு அவர்களின் 3ஆம் ஆண்டுத் திவசம் (திதி) 10-07-2000 இன்று திங்கள் காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. இவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன வைபவத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வணக்கம்.**

*"ஜனனோதயம்"*
*செல்வராசா அவனியூ,*
*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

**கணவன், பிள்ளைகள்**

(76312)

பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்களின்
வேண்டுகோளுக்கிணங்க 05-07-2000 புதன்கிழமை தொடக்கம், யாழ். நகரில்
மங்களகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

# மல்லிகா மிக்ஷர் தொழிலக விற்பனை நிலையம்

எங்களிடம் பவானி கச்சான் அலுவா தொழிலகத் தயாரிப்புகளையும், லீலா (சங்கானை) வெதுப்பக பிஸ்கற் வகைகளையும், சண்பீரான்ட் (அளவெட்டி) இனிப்பு, ரொபி வகைகளையும் தரமான நாட்டுப் புகையிலைச் சுருட்டு வகைகளையும், மல்லிகா பண்ணை முட்டைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

*இல. 230, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்துச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம்.* (76304)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-07-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.